16TH JANUARY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 65 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

## ஹிருணிகாவின் எச்சரிக்கை!



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு, முன்னாள் நாடாளு மன்ற

02ம் பக்கம்பார்க்க...

# காஸாவில் போர் நிறுத்தம்; இரு தரப்பும் இணக்கம்

## வீதிகளில் திரண்ட பலஸ்தீன் மக்கள்

## அல்லாஹ் அக்பர் தக்பீர் முழக்கதுடன் வரவேற்பு

இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கிட்டதட்ட இரண்டு ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது. கடந்த 2023-ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதியன்று, இஸ்ரேலுக்குள் புகுந்து நூற்றுக்கணக்கானோரை பிணைக்கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர்.

இதையடுத்து, காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது.

இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா, எகிப்து, கத்தார் நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இதனிடையே, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் டிரம்ப், வருகிற 20ஆம் திகதி பதவி ஏற்க உள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

# இலங்கை சீனாவுக்கிடையில் 15 உடன்படிக்கைகள் கைச்சாத்து

## இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயார் - சீன ஜனாதிபதி



சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்விற்கும் (Xi Jinping) இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று (15) பிற்பகல் சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது.

சீன மக்கள் மண்டபத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு, சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் அமோக வரவேற்பளித்தார், மரியாதை வேட்டுக்களுடன் மிகுந்த கௌரவமான முறையில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இருதரப்பு அரச தலைவர்களுக்கும் இடையில் சுமூகமான கலந்துரையாடல் நடைபெற்றதோடு அடுத்து இரு தரப்பு கலந்துரையாடல்கள்

02ம் பக்கம்பார்க்க...

# இலங்கைக்கு 3500 ஹஜ் கோட்டா இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கை சவூதி ஆரேபியாவுக்கிடையில் வருடாந்த ஹஜ் ஒப்பந்தம் கடந்த சனிக்கிழமை (11) ஜித்தாவிலள்ள ஹஜ் விவகார அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் சவூதியின் சார்பில் ஹஜ் துணை அமைச்சர் அப்துல் பத்தா பின் சுலைமான் பத்தா,

02ம் பக்கம்பார்க்க...

# போலி வாக்குறுதிகளை வழங்கிய கும்பலை விரட்டியடிக்க மக்கள் தயார்

## மஹிந்த ராஜபக்ஷ கருத்து



போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த கும்பலை விரட்டியடிக்க மக்கள் தயாராகி வருகின்றனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச (Mahinda Rajapaksa) தெரிவித்துள்ளார்.

இனிவரும் தேர்தல்கள் எமக்கு

02ம் பக்கம்பார்க்க...

# மேல் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதியரசர் லபர் தாஹிரை நியமிக்க கோரிக்கை

உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு லபர் தாஹிரின் பெயர் முன்மொழியப் படாமையினால் விரைவில் வெற்றிடமாகவுள்ள மேல் நீதிமன்ற தலைமை நீதிபதியாக அவரை நியமிக்க வேண்டுமென நீதித்துறை சார்ந்தோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நாட்டில் பரவலாக விவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

பாராளுமன்றம்

03ம் பக்கம்பார்க்க...

# பாராளுமன்ற குழுக் கூட்டங்கள் புறக்கணிப்பு; ஐ.ம.சக்தி அதிரடி முடிவு

பாராளுமன்ற குழுக் கூட்டங்களைப் புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற குழுக்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படாததால் இத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் பொது நிதிக்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இலங்கை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆரம்பிக்கப்பட்டன.

அபிவிருத்தியின் புதிய யுகத்திற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி இதன் போது வலியுறுத்தினார்.

அத்தோடு நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன ஜனாதிபதி சீ ஜிங்பிங் , எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ். கே. ஜே. பண்டார ஆகியோரும் பங்கேற்றனர்.



## ஹிருணிக்காவின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர அரசியல் ரீதியான எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

சஜித் பிரேமதாச பலவீனமான அரசியல் தலைவர் என்றும் ஹிருணிகா வர்ணித்துள்ளார்.

அத்தோடு, அவர் தனது தவறுகளை துரித கதியில் திருத்திக் கொள்ளாது போனால் கட்சியில் இருந்து பெரும்பாலானவர்கள் விலகிக் கொள்ளும் நிலை ஏற்படலாம் என்று சஜித் பிரேமதாசவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அதிருப்தியுற்று விலகும் பலரும் அடுத்த கட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளும் சாத்தியம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் தான் எந்தவொரு கட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை என்றும் ஹிருணிகா பிரேமசந்திர தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

## பாராளுமன்ற...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

குழு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் இயங்குவதால் அக் குழுக் கூட்டங்களில் பங்கேற்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## போலி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வெற்றி வாய்ப்புக்களையே பெற்றுத் தரும். நாம் மீண்டெழுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வீழ்ந்துவிட்டது, இனி அந்தக் கட்சிக்கு மீள எழுச்சி இல்லை என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

இறுதியாக நடைபெற்ற இரண்டு தேர்தல்களும் எமக்குத் தோல்விகளைத் தந்தாலும் நாம் அதனைப் படிக்கற்களாக மாற்றியுள்ளோம். இனிவரும் தேர்தல்கள் எமக்குச் சாதகமாகவே அமையும்.

அதாவது அந்தத் தேர்தல்கள் எமக்கு வெற்றி வாய்ப்புக்களையே பெற்றுத் தரும். நாம் மீண்டெழுவோம். தேர்தலின்போது போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த கும்பலை விரட்டியடிக்க மக்கள் தயாராகி வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.



## இலங்கைக்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இலங்கையின் சார்பில் புத்த சாசன கலாச்சார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இதன் பின் இரு அமைச்சர்களும் ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வில் தேசிய ஒருங்கிணைப்பு பிரதியமைச்சர் முனீர் முழப்பர், சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜவத் ஜித்தாவிலுள்ள பிரதித் தூதுவர் மஹ்பூசா லாபிர் உட்பட மேலும் பலரும் கலந்து கொண்டனர்.

## காஸாவில்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தான் பதவி ஏற்று இரு வாரங்களுக்குள் பிணைக்கைதிகள் விடுவிக்கப்படவில்லை எனில் மிக மோசமான விளைவுகளை ஹமாஸ் படையினர் சந்திக்க நேரிடும் என டிரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. பாலஸ்தீனிய கைதிகள் இஸ்ரேலிய பிணைக்கைதிகளை பரிமாற்றம் செய்ய இரு தரப்பும் ஒப்புதல் தெரிவித்துள்ளது. இதன் மூலம் 15 மாதங்களாக நடைபெற்று வரும் காசா போர் முடிவுக்கு வரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

**ஒப்பந்தத்தில் என்ன உள்ளது:**

காஸாவில் போர்நிறுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய விவரங்களை அல் ஜசீரா அரபி வெளியிட்டுள்ளது.

முதல் கட்டத்தில்:

இஸ்ரேலிய இராணுவம் காசாவிற்குள் 700 மீட்டர் (2,297 அடி) தூரத்திற்கு திரும்பும்.

ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் 250 பேர் உட்பட சுமார் 2,000 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவிக்கவுள்ளது.

பாலஸ்தீனிய குழுக்கள் 33 இஸ்ரேலிய கைதிகளை விடுவிக்கும்.

காசாவில் காயமடைந்தவர்களை மருத்துவ சிகிச்சை பெற இஸ்ரேல் அனுமதிக்கும்.

முதல் கட்டம் தொடங்கி ஏழு நாட்களுக்குப் பிறகு இஸ்ரேல் எகிப்துடனான ரஃபா கிராசிங்கை திறக்கும்.

பிலடெல்பி காரிடார் என்று அழைக்கப்படும் எகிப்துடனான காஸாவின் எல்லையிலிருந்து இஸ்ரேலியப் படைகள் பின்வாங்கத் தொடங்கும்.

**நள்ளிரவில் வீதிகளில் திரண்ட மக்கள்:**

போர் நிறுத்தம் தொடர்பான அறிவிப்பு வெளியாகியதும் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் காஸா வீதிகளில் திரண்டு அல்லாஹ் அக்பர் என முழக்கமிட்டு தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டினர்.







# ஹஜ் தூதுக்குழுவுக்கு வரவேற்பளித்த மக்கா குர்ஆனிய மன்றத் தலைவர் சாதிக் ஹாஜி






இந்த ஆண்டு ஹஜ் கடமை ஏற்பாடுகளுக்காக சவூதி அரேபியா சென்றிருந்த தூதுக் குழுவுக்கு மக்காவிலுள்ள சர்வதேச குர்ஆன் மன்றத் தலைவர் முஹம்மது ரியால் (சாதிக் ஹாஜி) வரவேற்பு விருந்துபசாரம் வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் புத்தசாசன கலாச்சார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் முனீர் முழப்பர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், சவூதி அரேபிய தூதுவர் அமீர் அஜ்வத் உட்பட மேலும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை உம்ராவை நிறைவேற்றிய பின்னர் பிரதியமைச்சர் முனீர் முழப்பர், பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் ஆகியோர் மக்காவிலுள்ள சாதிக் ஹாஜியின் வீட்டுக்கும் சென்று கலந்துரையாடினர்.

இதேவேளை உம்ரா கடமைக்குச் சென்றிருந்த ஹஜ் குழுத் தலைவர் றியாஸ் மிஹிலாரும் சாதிக் ஹாஜியைச் சந்தித்து ஹஜ் விடயங்கள் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

---

**மேல்....**

(முன் பக்கத் தொடர்ச்சி)

கூடும்போது இதுகுறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பவுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

**(இப்னு தவ்பீக் ஆலீம்)**

ஷைத்தானின் காலடிச் சுவடு

”விசுவாசிகளே ஷைத்தானின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். (ஏனென்றால்) எவன் ஷைத்தானுடைய காலடிச் சுவடுகளைப் பின்பற்றிச் செல்கிறானோ அவனை ஷைத்தான் மானக்கேடான விஷயங்களையும், மானக்கேடான காரியங்களையும் செய்யும்படி நிச்சயமாக ஏவிக் கொண்டே இருப்பான்.” (24:21)

அல்லாஹ்வின் மன்னிப்புக்கான வழி

“உங்களில் பொருள் அருளப் பெற்றோரும், (பிறருக்கு உதவி செய்ய) இயல்புடையோரும் தங்கள் பந்துக்களுக்கோ, ஏழைகளுக்கோ, அல்லாஹ்வுடைய பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கோ (யாதொன்றுமே) கொடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்ய வேண்டாம்.

(அவர்களால் உங்களுக்கு ஏதும் வருத்தங்கள் ஏற்பட்டிருந்தால்) அதனை மன்னித்துப் (பழைய வருத்தத்தைப்) பொருட்படுத்தாது விட்டு விடவும். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மிக்க மன்னிப்போனும், கிருபையுடையோனுமாக இருக்கிறான்.” (24:22)

நிர்ப்பந்தம் இல்லை

““(நபியே) நீர் கூறும்! (முற்றிலும்) உண்மையான இ(வ்வேதமான)து உம் இறைவனால் அருளப்பட்டது. விரும்பியவர் (இதை) விசுவாசிக்கலாம். விரும்பாதவர் (இதை) நிராகரித்து விடலாம். (ஆனால் இதை நிராகரிக்கும்) அக்கிரமக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தைத்தான் சித்தப்படுத்தியுள்ளோம்” (18:29)

”(எனினும்) நிச்சயமாக எவர்கள் (இவ்வேதத்தை) விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்கின்றார்களோ, அத்தகைய நன்மை செய்வோரின் கூலியை நிச்சயமாக நாம் வீணாக்கி விடுவதில்லை.” (18:30)

நிலையான நற்கருமங்கள்.

”பொருளும், மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (யன்றி நிலையானவைகளன்று) என்றுமே நிலையான நற்கருமங்கள்தான் உம் இறைவனிடத்தில் நற்கூலியைப் பெறுவதற்கும், நன்னம்பிக்கை கொள்வதற்கும் மிக்க மேலானவையாகும்” (18:46)

““(நபியே) நீர் கூறும் நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான். என எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே எவன் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகின்றானோ அவன் நற்கருமங்களைச் செய்து தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கி வருவானாக.” (18:110)

”வானங்களையும், பூமியையும் இவற்றுக்கு மத்தியில் உள்ளவைகளையும் படைத்துப் போஷிப்பவனும் அவனே, ஆதலால் (அந்த அல்லாஹ்) ஒருவனையே நீங்கள் வணங்குங்கள். அவனுக்கு வழிபடுவதில் (உங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களையும்) நீங்கள் சகித்துக் கொள்ளுங்கள்.” (19:65)

பெற்றோருடன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு

““(நபியே) உமதிறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக் கூடாதென்றும் கட்டளையிட்டிருப்பதுடன், தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளையிட்டிருக்கின்றான். அவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ முதுமையை அடைந்து விட்ட போதிலும் உம்மிடமிருந்து அவர்களை வெருட்டவும் வேண்டாம். அவர்களை (நிந்தனையாக)ச் ”சீ” என்று சொல்லவும் வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறிய போதிலும் புஜம் தாழ்த்தி) மிக்க மரியாதையாக (வும் அன்பாகவுமே பேசும்)” (17:23)

”அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடப்பீராக! அன்றி, “என் இறைவனே நான் ஒரு குழந்தையாக இருந்த பொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்து போஷித்த பிரகாரமே, நீயும் அவ்விருவர் மீதும் அன்பும் அருளும் புரியவாயாக“ என்று பிரார்த்திப்பீராக” (17:24)




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JANUARY 16 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இன நல்லிணக்கம் தேசிய ஐக்கியத்துக்காக பங்களித்த அப்துல்லாஹ் ஆலிம்

இலங்கையின் மூத்த மார்க்க அறிஞரும், புத்தள மாவட்ட ஜம்மியத்துல் உலமாவின் முன்னாள் தலைவரும், புத்தளம் காசிமியா அரபுக் கல்லூரியின் அதிபருமான அஷ்ஷெய்க் அப்துல்லா ஆலிமின் மறைவு புத்தளத்தில் மட்டுமன்றி முழு நாட்டுக்கும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

மர்ஹூம் அப்துல்லா மஹ்மூத் ஆலிம் சவூதி அரேபியாவின் மதீனாவில் உயர் கல்வி கற்று உலக முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக வழிகாட்டும் ராபிதத்துல் ஆலமுல் இஸ்லாமியா வில் பணிபுரிந்த பின் நாட்டுக்கு வந்து தன் தந்தை அறிஞர் மஹ்மூத் ஆலிம் தலைமையில் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த புத்தளம் காசிமியா அரபுக் கல்லூரியை பொறுப்பேற்று அதன் மூலம் நூற்றுக்கணக்கான உலமாக்களை உருவாக்குவதற்கு அளப்பரிய பங்களிப்பைச் செய்தார். புத்தளத்துக்கு ஆத்மீகத்துறையில் அளப்பரிய சேவைகளை புரிந்துள்ள அவர் புத்தளத்துக்கு சமூக ரீதியாகவும் தலைமைத்துவத்தினை வழங்கியுள்ளார்.

குறிப்பாக புத்தளம் மாவட்டத்தின் அரசியல் தலைமைத்துவங்களில் ஏற்பட்ட வெற்றிடங்களின் போது அந்த மாவட்ட முஸ்லிம்களது தேவைகளை உணர்ந்து சரியான வழிகாட்டல்களை செய்வதில் அவர் ஆற்றிய பங்களிப்பு என்றும் நன்றியுடன் நினைவு கூறத்தக்கது. குறிப்பாக பிரதேசத்தில் இன நல்லிணக்கம் மற்றும் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அவர் சிறப்பான தலைமைத்துவத்தை அங்கு வாழும் பௌத்த கத்தோலிக்க இந்து சமய தலைவர்களுடன் இணைந்து மேற்கொண்டார். அவர் சில வருட காலங்கள் நோயுற்ற போதும் காசிமியாவுக்கு ஒரு தகுதியான தலைமைத்துவத்தை தேர்வு செய்து அந்த கல்லூரியை சிறப்பாக முன்னெடுத்து செல்வதற்கு வழி காட்டினார். மாற்று மதத்தவருடன் நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதற்கான பாராட்டத்தக்க பங்களிப்பினை செய்தவர் அவராவார். பௌத்த பிக்கு ஒருவருடன் ஒன்றாக ஒரு உணவு பார்சலை பகிர்ந்து உண்ணும் புகைப்படங்கள் சில காலங்களுக்கு முன் ஊடகங்களில் வெளிவந்தது.

இதன் மூலம் மாற்று மதத்தவருடன் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு முன்மாதிரி காட்டியுள்ளார். மர்ஹூம் அப்துல்லா ஆலிமின் மறைவு குறிப்பாக புத்தளத்துக்கும் புத்தளத்தின் தலைமைத்துவத்துக்கும் பாரிய வெற்றிடத்தினை ஏற்படுத்தி உள்ளது.

காலத்தின் தேவைகளை உணர்ந்து சமுதாயத்திற்கு வழிகாட்டிய ஒரு உன்னத பேரறிஞராகவே அப்துல்லா ஆலிமை நாம் காண்கின்றோம். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் புத்தளத்தில் இருக்கின்ற ஏனைய இயக்கங்களுடன் இணைந்து மாவட்ட மக்களுக்கு அவர் ஆற்றிய பணிகள் இன்றும் நன்றியுடன் நினைவு கூறப்படுகின்றன. மர்ஹூம் அப்துல்லா ஆலிமுடைய பாவங்களை மன்னித்து அன்னாரின் மறுமை வாழ்வு சிறப்பாக அமைய நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக..

உண்மையில் புத்தளத்துக்கு அவரது மறைவு பெரும் வெற்றிடத்தினை உருவாக்கியுள்ளது. அவரது வழியில் அவருடைய மாணவர்கள், உலமாக்கள், கல்விமான்கள் சென்று புத்தளத்தின் சிறப்பான முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்வது மர்ஹூம் அப்துல்லா ஆலிமுக்கு செய்கின்ற ஒரு நன்றி கடனாக அமையும் என்பதே எமது கருத்தாகும்.




# பெரியவர் அப்துல்லா ஹஸரத்

அப்துல்லா ஹஸரத் மறைந்துவிட்டார் . கண்களுக்குள் அவர் உருவம்.

பேச்சு, செயல் எல்லாவற்றிலும் நிதானம், பொறுமை. பொது சேவையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற நெஞ்சுரம்.

தொடர்ச்சியான மக்கள் சேவை. குடும்ப அல்லது முரண்பட்ட பிரிவுகளுக்கிடையிலான சமரச முயற்சிகள், மத்ரஸா தலைமைத்துவம், கல்விப் பணிகள். அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள், ஆலோசனைகள். இன ஒருமைப்பாட்டு முன்னெடுப்புக்கள், சர்வமத சமாதான பேச்சு வார்த்தைகள், வாரந்தவறாத பயான்கள், கொத்துபா பிரசங்கங்கள்.

மத்ரஸா மார்க்க கல்விப் போதனைகள். இவற்றிற்கும் இன்னும் பல வற்றிற்கும் முழு நாளும் வருடம் பூராவும் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வந்த மக்கள் சேவகர் அப்துல்லா ஹஸரத்.

அவர் ஒரு ஆலிம், மார்க்க அறிஞர். அதே நேரம் அவர் வெளிப்படையான சமூக - அரசியல் செயற்பாட்டாளர். புத்தளம் மக்களின் நல்லது கெட்டது புத்தளத்தின் கல்வி எதிர்காலம், அரசியல் எதிர் காலம் பொருளாதார மீட்சி எல்லாவற்றிலும் அப்துல்லா ஹஸரத்தின் தலையீடும் ஆலோசனைகளும் செயல் திட்டங்களும் இருந்தன.

அவரது பிரசன்னம் இன்றி இத்தகைய காரியங்கள் எதுவும் நடந்ததாக எனக்கு நினைவில்லை.

புத்தளத்தின் தற்கால வரலாறு ஒளிவு மறைவின்றி எழுதப்படுமானால் அதன் தவிர்க்க முடியாத தலைவர்களில் ஒருவராக அவர் இனங்காணப்படுவார்.

அதுவும் கடந்த மூன்று பத்தாண்டுக்கால அரசியல், சமூக , சமய செயற்பாடுகளின் சுழற்சியில் ஒரு அச்சாணியாக அவர் செயற்பட்டார். என்ன சாதித்தார் எப்படிக் களங்களை உருவாக்கினார். நடந்த பேச்சு வார்த்தைகள் என்ன என்பதைப் பேசாமல் புத்தள வரலாற்றை நாம் எவ்விதத்திலும் பூர்த்தி செய்ய முடியாது.

தற்காலப் புத்தளம் சமூக - அரசியல் வரலாற்றில் அவரது தலைமைத்துவம் தனித்துவம் வாய்ந்தது. அதை வடிவமைப்பதில், குறைபாடுகளைத் தீர்ப்பதில், மக்களுக்கும் இளைஞர்களுக்கும் நம்பிக்கை அளிப்பதில் அவர் இடையறாது பணியாற்றியுள்ளார்.

நான் ஒரு ஆலிம், காசிமியா அதிபர் என்ற பந்தாக்கள் எதுவுமின்றி ஒரு சாமானியனாக, நண்பனாக, சகோதரனாகப் பழகத் தெரிந்திருந்தார். மக்களோடு மக்களாக மக்கள் பிரச்சினைகளில் ஒரு தொண்டனைப் போல் நின்ற சம்பவங்கள் ஒன்றல்ல இரண்டல்ல.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றி புத்தளம் தடம் புரண்டு கிடந்த காலத்தில் மாற்றுத் திட்டங்களையும்

நம்பிக்கைகளையும் உருவாக்கி மக்களின் ஏமாற்றத்தை தணித்த கதைகள், மீண்டும் புத்தளம் ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரை உருவாக்க மக்களை ஒரணியில் திரட்ட முன்வைத்த திட்டங்களின் கதைகள், புத்தளம் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியைப் பெறுவதில் இருந்த தடைகளை உடைப்பதற்கு எடுத்த தொடர் முயற்சிகளின் கதைகள், வடபுல இடப்பெயர்வு புத்தளத்தில் ஏற்படுத்திய பிரச்சினைகளுக்குத்தீர்வு காண்பது, மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் திட்டங்களை அறிமுகப்படுத்த எடுத்த முயற்சிகளின் கதைகள் எல்லாவற்றிலும் இன்னும் பல கதைகளிலும் கதாநாயகனாக வீற்றிருந்தவர் அப்துல்லா ஹஸரத்தான்.

காசிமியா மத்ரஸா மத்ரஸா மட்டுமல்ல. அது புத்தளம் ஐ. நா. சபை என்று கூறுமளவு நல்லிணக்க, சமாதான மற்றும் சமூக அரசியல் பிரச்சினைகளைக் கலந்துரையாடித் தீர்வு தேடும் இடமாகவும் விளங்கியது.

அவர் ஆலிம், மார்க்க அறிஞர் ஆனால் செக்கியூலர் மனோபாவம் கொண்டவர். நவீன யுகத்தையும் நவீன கல்வியையும் நன்கறிந்தவர்.

1979 அளவில் நான் அவரைச் சந்தித்தேன். புத்தளம் மீலாது விழா போட்டிகளை

ஒரு இளம் ஆலிமாக அவர் வழி நடத்திக் கொண்டிருந்தார்.

மீலாது விழாக் கட்டுரைப் போட்டியில் கரைத்தீவு அந்தகப் புலவர் செய்கலாவுதீனை உட்படுத்திப் போட்டியை அமைப்பது எப்படி என்பதை என்னிடம் கேட்டுத்தெரிந்து கொள்வதாக அந்த சந்திப்பு அமைந்தது.

அன்று தொடங்கிய அறிமுகம் பெரிய நட்பாகவே மாறியது. புத்தளம் முஸ்லிம்களின் வரலாறு எழுதப்பட

வேண்டும் என்று வலியுறுத்தி வந்ததோடு அது ஒரு நூலாக வெளியிடப்படும் வரை எனக்கும் எனது குழுவினருக்கும் தடை யற்ற ஒத்துழைப்பை வழங்கி இறுதி வரை எங்களோடிருந்ததை எப்படி மறக்க முடியும்.

புத்தளத்தில் ஒரு காலத்தில் நானும் எனது நண்பர் குழாமும் எடுத்து வந்த எல்லாப் புரட்சிகர முயற்சிகளுக்கும் கல்விப் பணிகளுக்கும் பச்சைக் கொடி காட்டி அதன் ஆதரவாளராக இருந்ததை எப்படி மறக்க முடியும்.

எல்லா வளங்களையும் பெற்ற ஒரு நவீன புத்தளத்தை அவர் கனவு கண்டார்.

எதிர்காலத்தைப் புத்தளம் இளைஞர்களின் கைகளில் கொடுத்து விட்டு ஒய்வெடுக்கச் சென்று விட்டார் எங்கள் நேசத்துக்குரிய அப்துல்லா ஹஸரத்.

– எம். எஸ். எம். அனஸ் –



# புத்தளத்தின் பொக்கிஷம் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம்

– இர்ஷாத் ரஹுமதுல்லா–

இலங்கையின் மூத்த உலமாவும் புத்தளம் காசிமியா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அப்துல்லா மஹ் மூத் ஆலிம் அவர்கள் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார்.

மர்/ஹும் அப்துல்லா ஆலிம் அவர்கள் புத்தளத்துக்கு ஒரு பொக்கிஷமாக அடையாளப்படுத்தப்பட்டவர். முஸ்லிம்கள் செரிந்து வாழும் புத்தளத்தை சன்மார்க்க வழியில் நெறிப்படுத்தி இந்த மக்கள் இறைவனோடு நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும் என்பதில் அப்துல்லாஹ் மஹ் மூத் ஆலிம் அவர்கள் பெரும் பங்காற்றி வந்துள்ளார்.

மிகவும் பழமை வாய்ந்த இலங்கையில் முதல் முதலாக உருவாகிய 7 அரபு மத் ரசாக்களில் புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரி மிக முக்கியமானதாகும்.

இதனை உச்ச அளவுக்கு உயர்த்துவதில் அப்துல்லா மஹ் மூத் ஆலிம் அவர்கள் பாரிய பங்கினை ஆற்றியுள்ளார்.

மர்/ஹும் அப்துல்லா மஹ்மூத் அவர்கள் புத்தளம் மாவட்ட அகில இலங்கை ஜமியத்துல் உலமா சபையின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றி வந்துள்ளார்கள்.

இவர்கள் பணியாற்றிய இந்தக் காலத்துக்குள் வருகின்ற அனைத்து பிரச்சினைகளையும் மிகவும் நிதானமாகவும் பொறுமையாகவும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் எவ்வாறு அதனை தீர்த்து வைக்க முடியும் என்கின்ற மிகவும் ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்து வந்துள்ளமை அவரது சமூகம் சார்ந்த விடயங்களை உற்று நோற்கின்ற பொழுது தெளிவாக புலப்படுகிறது.

புனித இஸ்லாம் மார்க்கம் எதனை எடுத்து நடக்கச் சொல்லுகிறதோ அதனை செயல்படுத்துவதற்கு அரபுக்கல்லூரியின் மாணவர்களை தயார்படுத்துகின்ற பாரிய பொறுப்பை தன் மீது சுமந்து பணியாற்றி வந்துள்ளார்கள்.

இலங்கை திருநாட்டின் நாளா பாகங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இந்த கலாசாலையில் தங்களுடைய ஆன்மீக மற்றும் லௌகீக கல்விகளை பெற்று சமூகத்தின் பல்துறை சார்ந்தவர்களாக இன்றும் பணியாற்றி வருகிறனர். இதற்கான அடித்தளத்தை அல்லாஹ்வின் துணையுடன் ஏற்படுத்தியவர் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வெறுமனே உலமா சபையின் தலைவராகவும், மதரசாவின் அதிபராகவும் மற்றும் இருந்துவிடாமல் சமூகத்தில் காணப்படுகின்ற சகலத்துறை பிரச்சனைகளின் போதும் அதற்காக ஆஜராகி நல் ஆலோசனைகளை வழங்குவதில் எவற்றையெல்லாம் பெற்றுக் கொடுக்க முடியுமோ தன்னுடைய காசிமிய்யா மதரசாவுக்காக அவர்கள் கொண்டு வந்த பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் அவரது அந்த தூய்மையான உழைப்பின் வெளிப்பாட்டுக்கு இன்றும் சான்றாக இருக்கின்றது.

பெரிய ஹசரத் என்று அழைக்கப்படுகின்ற மஹ்மூத் ஆலிம் அவர்களுடைய புதல்வரான அப்துல்லா அவர்கள் தனது தந்தையின் பெயரை



ஏனைய சமூகங்களுக்கு இஸ்லாத்தின் மதிப்பையும் மரியாதையையும் எடுத்துச் செல்லுகின்ற மிகவும் பாரிய பொறுப்பை திறம்பட செய்த ஒரு உலமாவாக அவரை அடையாளப்படுத்த முடியும்.

சிறிது காலம் சுகவீனமுற்ற நிலையில் இருந்த அப்துல்லா மஹ்மூத் ஆலிம் அவர்கள் அந்த வேளையிலும் தன்னுடைய மதரசாவின் செயற்பாடுகளை மிகவும் திரம்பட செய்ய வேண்டும் என்பதற்காகவும் அது போன்று மதரஸாவுக்கு தான தர்மங்கள் வழங்கியவர்களுக்கு தன்னுடைய நன்றியினை தெரிவிப்பதில் ஒருபோதும் பின் நின்றதில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த





அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்களுடைய சிறப்பான பன்பை சிலாகித்துக் கூற வேண்டும்.

இந்த நாட்டில் இன ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் இனங்களுக்கிடையிலான மதம் சார்ந்த அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்ற போதெல்லாம் அங்கு அப்துல்லா மஹ்மூத் ஆலிம் அவர்களுடைய பிரசன்னம் இருந்து வந்துள்ளமை அவரது சமூகம் சார்ந்த பற்றின் வெளிப்பாடாக குறிப்பிட முடியும்.

முஸ்லிம் சமூகம் நவீன காலத்தில் இழந்துவிட்ட மார்க்க கல்வியை மிகவும் பற்று உறுதியுடன் அவர்களுக்கு மீளப் பெற்றுக் கொடுப்பதில் எங்கெல்லாம் சென்று தன்னுடன் சூடிக் கொண்டு அந்த மார்க்க பயணத்துக்கு மேலும் உறுதுணையாக இருந்ததை இங்கு காண முடிகின்றது.

அப்துல்லா மஹ்மூத் அலிம் அவர்கள் மௌலவி ஆசிரியர் நியமனம் மற்றும் பாடசாலைகளில் இஸ்லாமிய கற்கை நெறிகள் தொடர்பில் மிகவும் அவதானத்துடனும் துணிந்து அந்த நியமனங்களை பெற்றுக் கொடுக்கின்ற கோரிக்கைகளையும் உரிய தரப்புடன் பேசி அவற்றை பெறுகின்ற போராட்டங்களையும் முன்னெடுத்த ஒருவர்.

அதேபோல் சர்வ மத அமைப்பின் உறுப்பினராக இருந்து இனங்களுக்கிடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை மிகவும் கவனமாக கையாண்டு நிலையில் (திங்கட்கிழமை மாலை 5 மணி அளவில் அவரது உயிர் பிரிந்தது ). இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்

அப்துல்லா மஹ்மூத் அலிம் என்கின்ற ஒரு புத்தளத்தின் ஆளுமையின் சரிவானது இந்த புத்தளம் மக்களின் பேரிழப்பாகும்.

இது எவ்வாறு இருந்தாலும் அவர் புத்தளத்து சமூகத்துக்கு ஆற்றிய இந்த உளத்தூய்மையான பணிகளுக்காக நாங்கள் ஒவ்வொருவரும் இறைவனிடம் பிரார்த்திப்பது காலத்தின் தேவையாகும்.

அன்னாரது ஜன்னத்துல் பிர்தவுஸ் சுவன வாழ்வுக்காக விசேடமாக நாங்கள் பிரார்த்தனைகளை செய்வோம்.

# நிட்டம்புவ நகைக்கடையில் 4 மில்லியனுக்கும் அதிக கையாடல்

## முகாமையாளர் கைது; 20 வரை விளக்கமறியல்

நிட்டம்புவ New Swiss Gold House எனும் பிரபல நகைக்கடையின் முகாமையாளர், 46 இலட்சம் ரூபா பண மோசடி குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நகைக்கடையில் 20 வருடங்களுக்கு முன்னர் விற்பனைப் பணியாளராக இணைந்து நிறுவனத்தின் முகாமையாளராக உயர்ந்த இவர் தவணை முறையில் நகை கொள்வனவு செய்தவர்களிடம் இருந்து பெற்ற கொடுப்பனவுகளை கையாடியிருப்பதாகவும் நிறுவனத்தின் visiting card ஐப் பயன்படுத்தி நிறுவனத்தின் வாடிக்கையாளர்களை ஏமாற்றி தவறான முறையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டே கைது செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். இது தவிர பில் எழுதும் நடவடிக்கைகளிலும் பல மோசடிகளில் இவர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்லேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறித்த முகாமையாளர் கம்பஹா விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் நீண்ட நாட்களாக மேற்கொண்ட தேடுதல் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் கடந்த புதன்கிழமை (8) கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படும் வரையான காலப்பகுதியில் இவர் சிறிது சிறிதாக 46 இலட்சம் ரூபாவரை கையாடியிருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

இவர் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

குறித்த தங்க நகைக் கடையில் கடமையாற்றிய எம்.ஜே.எம். பஸீம் எனும் விற்பனைப் பணியாளரை 2024.06.14 ஆம் திகதி முதல் தமது நிறுவனத்தில் இருந்து பணி நீக்கம் செய்துள்ளதாகவும் , தமது நிறுவனத்துக்கும் இவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் இவருடன் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு தாம் பொறுப்பல்ல எனவும் New Swiss Gold House முன்னதாக வக்கீல் நோட்டீஸ் வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் எஸ்.ஏ.எம்.பாரூக் காலமானார்

கண்டி அக்குறணையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஊடகவியலாளர் எஸ்.ஏ.எம்.பாரூக் காலமானார். அன்னாரின் ஜனாஸா நேற்று அக்குறணை, புளுகஹதென்னையிலுள்ள பெரிய ஜும்ஆ பள்ளியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



அல் இஸ்லாம் நிறுவனரும் ஆசிரியருமான ஹம்ஸா ஹனிபா காலமான செய்தி அறிந்து, அவரது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள தெஹிவளை ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடிக்குச் சென்று ஈரான் இஸ்லாமியக் குடியரசின் கலாசார உத்தியோகத்தர் மொஸாமி குட் றஸல் அவர்கள் பிரார்த்தனை செய்த பின்னர் பிடிக்கப்பட்ட படம். படத்தில் இம்தியாஸ் பாக்கீர் மாகார், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன் உட்பட்ட பிரமுகர்களைக் காணலாம்.



## அமெரிக்கா புதிய அதிபர் பதவி ஏற்றால்

# மத்திய கிழக்கு நாடுகளின் அரசியல் மாற்றங்கள்!




எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)


மத்திய கிழக்கு நாடுகளின் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பதட்டம் தற்போது தொற்றிக் கொள்ளும் நிலையில் வரும் காலங்களில் இந்த அரபு பிராந்தியத்தில் மிகுந்த அழிவுகள் போரால் ஏற்படும் என்பது போன்ற மிகவும் மோசமான அரசியல் சூழல்கள் காணப்படுகிறது.

இந்த அரசியல் சூழல் ஈரான், சிரியா, பாலஸ்தீனம், லெபனான், துருக்கி மற்றும் ஏமென் போன்ற பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் சிக்கி தவிக்கும் நிலையில் யூதர்கள் மற்றும் அமெரிக்க எந்தவொரு நிலையிலும் இறங்கி வருவதாக தெரியவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இத்தனை ஆண்டுகளாக போர் நடந்து வரும் நிலையில் பாலஸ்தீன பிரதேசத்தை விட்டு இஸ்ரேலிய ராணுவம் முழுமையாக அகல மறுக்கும் பட்சத்தில் நாங்கள் பிணைய கைதிகளை ஒரு போதும் விடுவிக்க போவதில்லை என்று ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர்கள் தெளிவு படுத்திய நிலையில் நிலைமை மிகுந்த அனர்த்தம் நிறைந்த கள சூழல் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

இதற்கிடையில் ஈரான் இராணுவம் நாடு முழுவதும் திட்டமிடப்பட்ட பயிற்சிகளின் ஒரு பகுதியாக நாட்டின் மையத்தில் உள்ள யேவயணெ அணுசக்தி செறிவூட்டல் ஆலைக்கு அருகில் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது என்று அந்நாட்டு அரச ஊடகங்கள் தெரிவித்தன. அதாவது ஈரான் அநேகமாக அணு ஆயுத சோதனைகளில் முழுமையாக வெற்றி பெற்று அணு குண்டுகளை தயாரித்து வைத்து இருக்கலாம் என்பதே அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய நாடுகளின் மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், காதம் அல்-அன்பியா வான் பாதுகாப்பு தளத்தின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் காதர் ரஹிம்சாதேவின் உத்தரவின் கீழ், நடான்ஸ் அணுமின் நிலையத்தின் வான் பாதுகாப்பு மண்டலத்தில், எக்டேதார் (அதிகாரம்) 1403 என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட இராணுவப் பயிற்சியின் முதல் கட்டம் தொடங்கியது.

இதன் தொடர்ச்சியாக ஏக்டேதார் 1403" பயிற்சியின் முதல் கட்டத்தின் தொடக்கத்தை அறிவித்த பிரிகேடியர் ஜெனரல் ரஹிம்சாதே, இந்த இராணுவப் பயிற்சியின் போது, இஸ்லாமிய புரட்சிக் காவலர்களின் (ஐசுபுஊ) வான்வெளிப் படையின் வான் பாதுகாப்புப் பிரிவுகள் விரிவான பாதுகாப்பை வழங்குகின்றன என்றார்.

அமெரிக்க புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 20 ந் தேதி பதவி ஏற்கும் நாளில் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட அதிகம் சாத்தியக்கூறு இருப்பதாக ஈரான் அரசு தலைமை உறுதியாக நம்பும் சூழலில் தான் அணு ஆயுத பயிற்சி நிலையத்தில் அருகே வான்படை பயிற்சியை ஆரம்பித்து நாங்கள் எந்தவொரு எல்லைக்கும் தயார் என்பதை தனது எதிரிகளுக்கு முழுமையாக பிரகடனம் செய்து இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

கடந்த அக்டோபர் மாதம் ஈரானிய இராணுவ தளங்கள் மீது இஸ்ரேலிய(ளைசயநட) தாக்குதல்கள் - தெஹ்ரானால் ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதலுக்கு பதிலடியாக நடத்தப்பட்டது.ஈரானின் பெரும்பாலான வான் பாதுகாப்பு அமைப்புகள் தகர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது, இதில் ரஷ்யாவால் தயாரிக்கப்பட்ட நான்கு ளு-300 வான் பாதுகாப்பு அமைப்புகள் அடங்கும் என்று கூறப்பட்ட நிலையில் தான் ஈரான் நாட்டின் புரட்சிகர இஸ்லாமிய கூட்டு படைகள் இந்த நிலையை ஏற்படுத்தி சர்வதேச நாடுகள் மத்தியில் ஒரு வலுவான செய்தியை நம்பக்கூடிய அளவுக்கு சொல்லியதாக நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

திங்களன்று, புரட்சி காவலர் படையின் செய்தித் தொடர்பாளர் அலி முகமது நைனி, மார்ச் நடுப்பகுதி வரை ஈரானின் பிற பகுதிகளையும் உள்ளடக்கும் வகையிலான பயிற்சிகள், "புதிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு" பதிலளிக்கும் வகையில், விவரிக்கப்படாமல் நடத்தப்படுகின்றன என்றார்.

இந்த நிலையில் அமெரிக்கா தேர்தலில் வெற்றி பெற்ற டொனல்ட் டிரம்ப் இந்த மதம் வருகிற ஜனவரி 20 ம் திகதி அதிபராக பதவியேற்க உள்ளார்.

மேலும் இவர் பதவியேற்ற 24 மணி நேரத்திற்குள் உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரை நிறுத்துவதாக சபதம் எடுத்துள்ளார். இந்நிலையில் ஹாமாஸ்/க்கு இரண்டு வாரங்கள் மட்டும் கெடு விதித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிறது. மேலும் இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் உலக போராக வெடிக்க இருந்த நிலையில் தற்போது அமைதி நிலையில் உள்ளது. இந்நிலையில் டிரம்ப் பதவி ஏற்றவுடன் இந்த போரினை உடனடியாக நிறுத்துவதாக கூறியிருந்தார். ஹமாஸ் அமைப்பினர் நிறைய பிணைய கைதிகளை பிடித்து வைத்துள்ளதாகவும் அதில் அமெரிக்க பிணைய கைதிகள் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் ஹமாஸூக்கு டொனால்ட் டிரம்ப் 2 வாரங்கள் மட்டும் கெடு விதித்துள்ளார். அதில் அவர் நான் பதவியேற்ற 2 வாரத்திற்குள் நீங்கள் பிடித்து வைத்திருக்கும் பிணையக் கைதிகளை விடுவிக்க ஒப்பந்தம் செய்து விடுவிக்க வேண்டும். ஒருவேளை இந்த ஒப்பந்தத்தை செய்யாவிட்டால் மத்திய கிழக்கில் மோதல் வெடிக்க தொடங்கும் என டொனல்ட் டிரம்ப்ஹமாஸ் அமைப்புக்கு கெடு விதித்துள்ளது தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது


மேலும், டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில், இது ஹமாஸ/க்கு நல்லதல்ல. 2023 அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் ஒருபோதும் நடந்திருக்கக் கூடாது என்று நான் இனி சொல்ல வேண்டியதில்லை. ஆனால், 20ஆம் தேதி நான் பதவியேற்கும் முன் ஹமாஸ் பணயக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். பணயக்கைதிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம் போன்ற பேச்சுகளுக்குள் செல்ல நான் விரும்பவில்லை.

ஆனால் பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை என்றால் மத்திய கிழக்கில் நரகம் வெடிக்கும்" என எச்சரித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக பதவி ஏற்க உள்ள டொனால்ட் டிரம்ப் அண்டை நாடுகளுக்கும்.. மற்ற சில எதிரி நாடுகளுக்கும் அவர் எச்சரிக்கை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது

கால்வாய் மற்றும் கிரீன்லாந்து பகுதிகளை நான் அதிபர் ஆனதும் அமெரிக்காவுடன் இணைக்க பணிகளை செய்வேன் என்று கூறி உள்ளார். இந்த பகுதிகள் பாதுகாப்பு ரீதியாக அமெரிக்காவிற்கும் மிகவும் முக்கியம் என்பதை மறக்க வேண்டாம் என்று அவர் கூறினார்.

இது போன்ற கள சூழலில் ஹொதிக்கள் தெற்கு செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் அமெரிக்க கடற்படை போர்க்கப்பல்கள் மற்றும் வணிகக் கப்பல்களுக்கு எதிராக தாக்குதல் நடத்த இந்த ஆயுதக் கிடங்குகள் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. வரும் 20 ந் தேதி பதவி ஏற்கும் டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கைகள் மிகவும் கடுமையாக இருக்கும் என்பதே சர்வதேச முகாமையாளர்களின் பார்வையாக இருந்து வருகிறது. அதேநேரத்தில் பிராந்திய பங்காளிகள் மற்றும் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் வணிக கப்பல்களை அச்சுறுத்தும் ஈரானிய ஆதரவு ஹொதி முயற்சிகளை சீரழிக்கும் அமெரிக்க பாதுகாப்பு படையின் முயற்சி வலுவடைந்து வருகிறது.



செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்ட கப்பல் மீது ஹொதி தாக்குதல்களுக்கு பதிலடியாக அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் ஏமனில் உள்ள இலக்குகளை பலமுறை தாக்கியுள்ளன. அதே போன்று, காசாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு எதிராக செங்கடல் வழியாக செல்லும் இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் கப்பல்களுக்கு தாக்குதல் நடத்துவதாக ஹொதி அமைப்பு சபதம் எடுத்துள்ளது. இவ்வாறனதொரு பின்னணியில், இஸ்ரேல் மீதான ஏவுகணைத் தாக்குதல்களை நிறுத்துமாறு ஏமனின் ஈரான் ஆதரவு ஹவுதிகளுக்கு தொடர் எச்சரிக்கைகளை இஸ்ரேல் ஆதரவு தரப்புகள் விடுத்து வருகின்றன. இது போன்ற தாக்குதல்கள் தொடர்ந்தால் ஹமாஸ், ஹிஸ்புல்லா மற்றும் சிரியாவின் அல்-அசாத் ஆகியவர்களுக்கு ஏற்பட்ட அதே பரிதாபகரமான கதி ஹவுதிகளுக்கு நேரிடும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டார்களோ அதே போல் ஹொதீக்கள் தலைவர்களும் ஈவு இரக்கம் இன்றி படுகொலை செய்யப்பட அதிகம் வாய்ப்பு உள்ளது என்பதை இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் தலைவர்கள் கூறி உள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவ தலைமையும் வெளிப்படுத்த முயற்சி செய்யும் ஒவ்வொரு கருத்துக்களும் அமெரிக்கா புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவிக்கு வருவதைக் மையப்படுத்தியே அமைந்துள்ளது என்பதே பலரின் கருத்தாக இருக்கிறது.

அதேநேரத்தில், சர்வதேச அளவில் கடும் போக்கு வாதத்தை முன்னெடுத்துச் செல்ல முயலும் டொனால்ட் ட்ரம்ப் மீது வழக்குகள் நிலுவையில் உள்ளது. அதன் அடிப்படையில் அமெரிக்கா புதிய அதிபர் ஆக பதிவியேற்க இருக்கும் டொனால்ட் ட்ரம்ப் தன்னைப் பற்றிய தகவல்களை வெளியில் சொல்லாமல் ரகசியமாக வைத்திருப்பதற்காக பணம் கொடுத்த விவகாரத்தில் டொனால்ட் டிரம்புக்கு நியூயார்க்கில் தண்டனை அறிவிக்கப்படும் என நீதிபதி தெரிவித்துள்ளார். இன்னும் வரும் 20 ந் தேதி அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்க உள்ள நிலையில்,

இந்த உத்தரவு வந்துள்ளது.

"டிரம்புக்கு சிறைத்தண்டனை, அபராதம் போன்ற எதுவும் விதிக்கப்படாது, மாறாக இதற்கு "சரியான தீர்வு கண்டு வழங்கப்படும்". அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவர் இந்த விசாரணைக்கு நேரிலோ அல்லது காணொளி வாயிலாகவோ கலந்து கொள்ளலாம்", என்று நியூயார்க் நீதிமன்றத்தின் நீதிபதி ஜ/வான் மெர்ச்சன் உத்தரவிட்டார். அதிபராக பணியாற்றும்போது ஒரு கிரிமினல் வழக்கால் திசை திருப்பப்படுவதை பற்றிய டிரம்பின் கவலைகளை குறைக்கும் விதமாக, தான் என்னென்ன நடவடிக்கைகளை (தண்டனை) எடுக்கலாம் என தனக்கு அறிவுரை வழங்கப்பட்டதாக நீதிபதி மெர்ச்சன் கூறினார். ஆனால், நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்வது குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை.78 வயதான டிரம்ப் 2029-ஆம் ஆண்டு வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறும் வரை தண்டனையை தாமதப்படுத்துவது அல்லது சிறைத் தண்டனை இல்லாமல் வேறொரு தண்டனையை அளிப்பது போன்ற போன்றவற்றை நீதிபதியிடம் உள்ள வாய்ப்புகள் ஆகும்.

இதற்கிடையில் டொனால்ட் டிரம்ப் மீது சுமத்தப்பட்ட 34 குற்றச்சாட்டுகளையும் நியூயார்க் நகரிலுள்ள மேன்ஹாட்டன் குற்றவியல் நீதிமன்றம் கடந்த ஆண்டு மே மாதம் உறுதி செய்தது. குற்றவியல் வழக்கில் அமெரிக்காவின் அதிபராக இருந்த ஒருவர் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யட்டது அதுவே முதல்முறை.

கடந்த நவம்பரில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் டிரம்ப் மீண்டும் வெற்றி பெற்று அதிபராகப் பொறுப்பேற்கவுள்ள சூழலில், இந்த வழக்கில் டிரம்ப்புக்கான தண்டனை வரும் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படுவதாக உள்ளது. எனினும், அதனை எதிர்த்து டிரம்ப் சார்பில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதைப் பரிசீலித்த மேன்ஹாட்டன் நீதிபதி ஜூவான் எம். மொசன், மனுவைத் தள்ளுபடி செய்தார்.

மேலும், சிறைத்தண்டனையோ, அபராதமோ விதிக்கப்படாது என்று நீதிபதி ஜூவான் எம். மொசன் விளக்கம் அளித்திருந்தார். இருப்பினும், குற்றவியல் வழக்கில் தண்டனை என்பது விளைவுகளை ஏற்படுத்தும் என்று உச்சநீதிமன்றத்தில் வாதம் வைக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவை விட இறுகும் சீனாவின் பிடி!



எம்.எஸ். அமீர் ஹுசைன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா அண்மையில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவை வலுவடையச் செய்ய நடவடிக்கை எடுத்தார். இந்திய பிரதமர், நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் இந்தியா சென்றார். இந்தியாவுக்கு அடுத்தபடியாக தற்போது நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி சீனா சென்றுள்ளார். இந்தியாவுக்கு இலங்கை எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றதோ அதை விட, சீனாவுக்கு இலங்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. அதனால், சீனா மேலும் தாமதிக்க விரும்பவில்லை.

சீனா முழுமையான கம்யூனிச கொள்கையை பின்பற்றும் நாடாகும். சீனாவின் கம்யூனிச சிந்தனையால் கவரப்பட்டதன் காரணமாகவே ஜே.வி.பி. யின் ஸ்தாபகரான ரோஹன விஜேவீர 1970 ஆம் ஆண்டு கால கட்டத்தில் சோவியத் ரஷ்யாவில் மருத்துவக் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில், இவ்வாறானதொரு சோசலிச சிந்தனையை பின்பற்றும் ஒரு அரசியல் கட்சியை உருவாக்கினார். ஆனாலும், அவரால் இந்த நாட்டில் ஆட்சியை பிடிக்க முடியாமல் போன நிலையில் முன்னாள் ஜனாதிபதித ஆர். பிரேமதாசா ஆட்சியில் அரசுக்கு எதிராக 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சி காரணமாக கொல்லப்பட்டார். 1976 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்ததால் அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, விஜயவீரவை பிடித்து சிறையில் அடைத்திருந்தார். பின்னர் 1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்தன அவரை விடுதலை செய்தார்.

தற்போது அதே ஜே.வி.பி. யின் மறு வடிவமாக ஆட்சி பீடம் ஏறி இருக்கின்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இப்போது சோசலிச நாடுகளுடனான உறவை புதுப்பித்து நட்பை பலப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். எந்தவிதமான ஆபத்தான நிலையிலும் மிகுந்த அக்கரையோடு நேசக்கரம் நீட்டி வரும் அயல் நாடான இந்தியாவுடன் பலமான உறவு பேணப்படுகின்றது. ஏற்கனவே இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்த 2022 ஆம் ஆண்டு காலகட்டத்தில் சுமார் 420 கோடி அமெரிக்க டாலர்களுக்கு மேல் பலவிதமான கடன் வசதிகளை கொடுத்து இலங்கையை மீட்டெடுத்த நாடுகளின் வரிசையில் இந்தியா முக்கியமான இடத்தை பெறுகின்றது.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில் நேச நாடு என்ற பெருமை சீனாவுக்கு இருந்து வருகின்றது.

அதன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வும் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் அதன் பின்னர், 2019 ஆம் ஆண்டு கோதாபாய ராஜபக்ஷ மற்றும் ரனில் விக்கிரமசிங்கா ஆகியோரும் கூட இந்த சீனாவை அரவணைத்ததாகவே பொருளாதார மற்றும் வெளிவிவகார கொள்கைகளை அமைத்து, சீனாவுடன் மிகவும் இறுக்கமான உறவை பேணி வந்தனர் என்று கூறலாம். ஏன் அந்தளவிற்கு சீனா முக்கியத்துவம் பெறுகின்றது? என்ற வினா எழுகின்றது. சீனாவுக்கு இலங்கை முக்கியமா? அல்லது அந்நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

ஏற்கனவே இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் என்ற அடிப்படையில் பாரிய பொருளாதார வளம் கொண்ட கேந்திர நிலையங்களை சீனாவிடம் 99 வருட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கையளித்து இலங்கை பொருளாதார நலன்களை அடைந்திருக்கின்றது.

அத்துடன் இலங்கையை கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீட்பதற்காக சீனா இலங்கைக்கு கொடுத்திருக்கும் கடன்களின் அளவு 150,000 பின்னரே, சர்வதேச நாணய நிதியம் 300 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட தொகைகளை இலங்கைக்கு கடனாக கொடுக்க இணக்கம் தெரிவித்தது.

அதன் காரணமாகவே, இலங்கை 2022 ஆம் ஆண்டில் இருந்து 2024 செப்டம்பர் வரையான அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டு வருட கால ஆட்சியில் ஓரளவிற்கு பொருளாதார மீட்சி கண்டது. இந்நிலையில் தற்போது 04 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயம் பல மட்டங்களில் பயனுடையதாக அமைய இருக்கின்றது. குறிப்பாக புதிய வர்த்தக வாணிப உடன்படிக்கைகள், முதலீட்டு வாய்ப்புக்கள், ஏற்கனவே கொடுக்க இருக்கின்ற கடனில் மேலும் சலுகைகள் என்று பல உதவிகளை இலங்கை சீனாவிடம் இருந்து எதிர்பார்க்கின்றது.

அத்துடன் தற்போது பதவியில் இருப்பது தூய கம்யூசிச சார்ந்த ஆட்சியாக இருப்பதால் முன்னைய காலப்பகுதிகளை விட சீனாவின் நேசக்கரம் இலங்கைக்கு பல வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடிகின்றது. அது மட்டுமல்லாமல், பிராந்தியத்தில் வர்த்தக ஏகாதிபத்திய விரிவாக்கங்களில்



இலங்கை ஒரு போதும் சீனாவை புறக்கணித்து ஆட்சி வியூகங்களை வகுக்க முடியாது. அந்தளவிற்கு இலங்கை சீன இராஜதந்திர உறவு சுமார் 50 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்நாட்டின் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலப்பகுதி முதல் இந்த உறவு பலமடைந்ததாக இருந்து வருகின்றது. குறிப்பாக இலங்கையை ஆட்சி செய்யும் அனைத்து இடதுசாரி கட்சிகளதும் இலங்கைக்கு சீனா முக்கியமா? என்பது அடுத்து எழுகின்ற வினாவாகும்.

ஒருவகையில் பார்த்தால் பொருளாதார வளமும் பலமும் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கைக்கு சீனா முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. அதே போன்று மறுபுறமாக சீனா பிராந்தியத்தில் வல்லரசாக இருந்து வருவதால் அதன் பிராந்திய இராணுவ விரிவாக்கம், பாதுகாப்பு, சந்தைப்படுத்தல் போன்ற இலக்குகளை அடைய இலங்கை கோடி ரூபாய்களுக்கும் (420 கோடி அமெரிக்க டாலர்) அதிகமானதாகும். இந்தளவு கடனை கொடுத்துள்ள சீனாவுக்கு இலங்கை வருடாந்தம் மேலும் பல பில்லியன் ரூபாய்களை வட்டியாக செலுத்தி வருகின்றது. 2022 ஆம் ஆண்டு இலங்கை பொருளாதார ரீதியாக படு பதாளத்தில் விழுந்த போது சீனா இலங்கைக்கு கைகொடுத்தது. அந்த நாடு கடன் மீளமைப்புக்கு உடன்பட்டு அது தொடர்பான உடன்படிக்கையில் கையொப்பம் இட இணங்கிய ஈடுபட்டுள்ள நாடுகள் வரிசையில் சீனாவின் பங்களிப்பு இந்தியாவை விட கூடுதலாக இருப்பதால் அந்நாடு கூடுதலான உதவிகளை இலங்கைக்கு வழங்க வேண்டும். இந்தியாவைவிட சீனா அதன் பிடியை மேலும் இருக்கமாக்க வேண்டும். அதனால் ஜனாதிபதி அநுரவிற்கு என்ன வகையான அன்பளிப்புக்களை வழங்கி இந்த விஜயத்தின் போது சீனா திருப்திப்படுத்த இருக்கின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

---

# கல்முனை சாஹிராவில் பழைய மாணவர்களின் முயற்சியினால் மலசலகூடங்கள் புனர் நிர்மாணம் செய்து கையளிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களான எம்.எம். எம். அம்ஸத், ஏ.எச். பௌசுல் அமீன், ஏ.சீ.ஏ. மஸாஹிர், ஏ.ஆர்.எம். நிசா ஆகியோரின் முயற்சியினால் நவீன வசதிகளுடன் கூடிய 40 மலசலகூடங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டும் மற்றும் 04 மலசலகூடங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டும் மொத்தமாக



44 மலசலகூடங்களைக் கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (10) பாடசாலையில் இடம் பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம். ஐ. ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இவ்வேலைத்திட்டத்தை துரித கதியில் மேற்கொண்டு அதனை திறம்பட முடித்து தந்த மேற்குறிப்பிடப்பட்ட பழைய மாணவர்கள் உத்தியோகபூர்வமாக அதிபர் உட்பட ஆசிரியர் மற்றும் மாணவ குழாத்தினரின் பாவனைக்கு உதவும் வகையில் கையளித்தனர்.

கல்முனை சாஹிரா பாடசாலையில் கல்வி கற்ற இம்மாணவர்களின் முயற்சியினால் கொழும்பைச் சேர்ந்த ஒரு தனவந்தரினால் இப்பாரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்களுக்காக இப்பழைய மாணவர்களுக்கு அதிபர் குழாத்தினரால் நினைவுச் சின்னம் வழங்கி, பாராட்டிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில், பாடசாலையின் அபிவிருத்திக் குழு செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர் மற்றும் பாடசாலையின் முகாமைத்துவக் குழு மற்றும் பகுதித் தலைவர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அஸ்வெசும தொகை அதிகரிப்பு பாராளுமன்ற குழு ஒப்புதல்

அஸ்வெசும பயனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை அதிகரிக்கும் திட்டத்திற்கு பொது நிதி தொடர்பான பாராளுமன்றக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாய் உதவித்தொகையை 17,500 ரூபாவாகவும், 8,500 ரூபாய் உதவித்தொகையை 10 ஆயிரம் ரூபாவாகவும், ரூ. 2,500 உதவித்தொகையை ஐயாயிரமாகவும் உயர்த்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

# தொழில்நுட்பம் உள்ளிட்ட 50 கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு அரசாங்கம் ஆதரவு





தொழில்நுட்பம் உள்ளிட்ட மூன்று புதிய கைத்தொழில்கள் உட்பட ஐம்பது கைத்தொழில்களை நாட்டிற்கு வெளிப்படுத்தப்படும் துறையினருக்கு ஆதரவை வழங்க தற்போதைய அரசாங்கம் செயற்படும் என வர்த்தக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

புதிய திட்டங்களை முன்னோக்கி ஒயா மடுவ பகுதியில் " சுவ சிறிபுர "" கைத்தொழில் வலயத்தில் வளமான ஆரோக்கியமான நாட்டை இலக்காகக் கொண்ட சமீபத்திய மருந்து உற்பத்தி ஆலையை (11) ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீயூ லைஃப் பயோடக் (தனியார்) நிறுவனம் இந்த புதிய மருந்து உற்பத்தி ஆலையை அறிமுகப்படுத்துகின்றது. 85 ஏக்கர் நிலப்பரப்பில் அனைத்து வசதிகளுடன் கூடிய 21 தொழிற்சாலைகள் இங்கு நிர்மாணிக்கப்படும். இதற்காக 23 மில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு செய்யப்படும். இது மிகவும் பெறுமதியான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகும் என தெரிவித்தார்.

மேலும் இது உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐரோப்பிய தரநிலைக்கு ஏற்ப தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 2000 நேரடி தொழில் வாய்ப்புக்களும் ஐந்தாயிரம் மறைமுக வேலைவாய்ப்புக்களையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது எனவும், இலங்கையின் மருந்துத் தேவைகளின் நிதிப் பெறுமதி 120 மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது.

அந்தத் தேவையில் சுமார் 20 வீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும். சர்வதேச சந்தைக்கு இது அனுப்பப்படும் என்பதால் இந்த ஏற்றுமதி நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டும் வாய்ப்பும் வழங்கப்படும்.

இலங்கையின் மருந்துத் தேவைகளின் நிதிப் பெறுமதி 120 மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# முழு நேர ஊழியராக சமுதாயத்துக்கு ஆற்றிய பங்களிப்பை மறக்க முடியாது

## தாருஸ்ஸலபிய்யா முதல்வர் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அனுதாபம்



புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், புத்தளம் மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் முன்னாள் தலைவருமான அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்களது மறைவு கேள்விப்பட்டு ஆழ்ந்த கவலையும் துக்கமும் அடைந்துள்ளோம் என்று தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம், அஷ்ஷெய்க் முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி தெரிவித்தார்

பிரல்யமான மார்க்க அறிஞர். புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், புத்தளம் மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் முன்னாள் தலைவருமான அஷ்ஷெய்க்அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்கள் மரணம் குறித்து தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம், அஷ்ஷெய்க் முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி அவர்கள் விடுத்துள்ள அனுதாபச் செய்தில் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டுக்கும், இஸ்லாமிய தஃவாப் பணிக்கும் காசிமிய்யா அரபுக் கல்லூரியின் பங்களிப்பு மகத்தானது.

இதில் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்களது ஈடுபாடு முதன்மையானது.

முழு நேர ஊழியராக இருந்து சமுதாயத்துக்கு அவர் ஆற்றிய சமூகப் பணிகள் என்றும் மறக்க முடியாதவை.

எல்லாம் வல்ல அல்லாஹுதஆலா அவரது பணிகளையெல்லாம் அங்கீகரித்து அருள் புரிய வேண்டுமென்றும், அவரது மறுமை வாழ்வு சிறப்படையவும், ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் என்ற உயர்ந்த சுவன வாழ்வு கிடைக்கப் பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரை இழந்து தவிக்கின்ற குடும்பத்தாருக்கும், காசிமிய்யா உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெற்ற வலம்புரி கவிதா வட்டத்தின் 107 ஆவது கவியரங்கம்



(ஐ.ஏ. காதிர் கான்)

பௌர்ணமி தின கவியரங்கு வரிசையில், "வலம்புரி கவிதா வட்டம்" தனது 107 ஆவது கவியரங்கினை புத்தாண்டின் முதலாவது கவியரங்காக திங்கட்கிழமை (13)நடத்தியது.

மினுவாங்கொடை – கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய தமிழ், கணித பாட ஆசிரியர் கவிஞர் மினுவாங்கொடை ஏ. சிவகுமார், கவியரங்கினை தலைமையேற்று சிறப்பாக நடாத்தினார்.

வகவ ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர்கனி முன்னிலை வகித்தார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்வினை நெறிப்படுத்தி தலைமையுரையும் வரவேற்புரையும் நிகழ்த்தினார். பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார்.

அண்மையில் எம்மை விட்டும் பிரிந்த பேராதனை ஏ.ஏ. ஜுனைதீன், ஹம்ஸா ஹனீபா, ரிஸ்கி ஷரீப், அந்தனி ஜீவா ஆகிய ஆளுமைகளுக்கான மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற வாசுகி வாசு, குறும் படம் தந்த கலைஞர் அமல் பாண்டி ஆகியோரும் பாராட்டப்பட்டனர்.

கவிஞர் மினுவாங்கொடை ஏ. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், கவிஞர்கள் பலர் கவி மழை பொழிந்தனர்.

காரைக்கவி பத்மநாதன், எஸ். ஜெகதீசன், எம்.பீ.எம். சித்தீக், ஆர். சந்திரசேகரன், கல்லொளுவை பாரீஸ், எஸ்.எச்.என். நுஸ்ரியா, அமல் பாண்டி, வி. பவித்திரன், ஹரிபிரியன் தேவ் போன்றோர் சபையை மலர்களால் அலங்கரித்தமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான நீதவான் நியமனம்

(எஸ்.எம்.எம். முர்ஷித்)



ஓட்டமாவடி எம்.கே.ஹாஜியார் வீதியை சேர்ந்த செய்யது மகுமூது அஹமட் ஹாதி தீவு முழுவதிற்குமான சமாதான நீதவானாக செவ்வாய்க்கிழமை (07) மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எச்.எம்.முஹம்மட் பஷீல் முன்னிலையில் சத்தியப் பிரமானம் செய்து கொண்டார்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் இவர் கலைப்பட்டதாரியும், சாட்டோ விளையாட்டு கழகத்தின் முகாமையாளருமாவார்.

வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலை மற்றும் அக்கரைப்பற்று மத்திய கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர் மர்ஹூம் மகுமூது அதிபர் அகமது நாச்சி தம்பதிகளின் புதல்வருமாவார்.

# மாணவி கடத்தல்: காரணம் வெளியானது

(தில்சாத் பர்வீஸ்)

பாடசாலை மாணவியை கடத்திய போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞன்இ பாடசாலை மாணவி கடத்தப்பட்டமைக்கான காரணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த சந்தேக நபர் தனது மாமன் மகளையே இவ்வாறு கடத்திச் சென்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கும் மேலாக ஜப்பானில் பணிபுரிந்து அங்கு சம்பாதித்த பணத்தை தனது மாமாவிடம் கொடுத்ததாக பொலிஸ் காவலில் உள்ள சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

பணம் தமக்கு திருப்பிக் கிடைக்காத காரணத்தினால் இவ்வாறான செயலைச் செய்யத் தூண்டியதாகவும் சந்தேக நபர் கூறியுள்ளார்.

தவுலகல பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் 18 வயது மகள் கடத்தப்பட்ட நிலையில் கடத்தப்பட்ட மாணவி மற்றும் சந்தேக நபரை கைது செய்ய 05 பொலிஸ் குழுக்களை பயன்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி, கடத்தலை மேற்கொண்ட சந்தேகநபரின் கையடக்க தொலைபேசி தரவுகளை ஆராய்ந்து வருவதாக அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மாணவியை வைத்தியரிடம் அனுப்பியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரி மற்றும் அஹதிய்யா பாடசாலைகளுக்கு கதிரைத் தொகுதிகள் கையளிப்பு





(பீ.எம் முக்தார்)

பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரி மற்றும் அஹதிய்யா பாடசாலைகளுக்கு கதிரைத் தொகுதிகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பேருவளை மஹகொட அஹதிய்யா பாடசாலையின் தலைவரும், பிரபல சமூக சேவையாளருமான எம். ரியாஸ்தீன் இமாம்தீனின் வேண்டுகோளின் பேரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன இதற்கான நிதியை வழங்கி இருந்தார்.

இந்த கதிரை தொகுதி கையளிக்கும் வைபவங்கள் சீனன்கோட்டை, ஜாமியத்துல் பாஸிய்யா கலாபீடத்திலும், சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியிலும் இடம் பெற்றதோடு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அதிதியாக கலந்து கொண்டு அதிபர்களிடம் இக்கதிரை தொகுதிகளை வழங்கி வைத்தார்.

தர்கா நகர் மற்றும் மக்கொனை பகுதியில் உள்ள சில பள்ளிவாசல்களுக்கும் இதன் போது கதிரைத் தொகுதி கையளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# உக்குவளை குருகெட்டவில் மண்சரிவு



சமீபத்தில் பெய்த மழைகாரணமாக உக்குவள குரூகெட்ட எனுமிடத்தில் சிறியளவிலான மண்சரிவு ஏற்பட்டது.

இதனையடுத்து இங்கு வசிப்போர் உடனடியாக மண்சரிவு ஏற்படாதிருக்கும் வகையில் மணல்மூடைகளை அடுக்கி வைத்தனர்.

இவ்விடத்தில் சில வீடுகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அறிவித்திருந்தும் எதுவித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கவில்லையென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# சர்வதேச இரத்தினக்கல், ஆபரண கண்காட்சி





**(பீ.எம் முக்தார்)**

பெந்தொட்டை சினமன் பீச் ஹோட்டலில் நடைபெறும் (GEM SRI LANKA) சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அண்மையில் பார்வையிட்டார்.

கடந்த 8ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கண்காட்சியின் இரண்டாவது தினமான 9ஆம் திகதி எதிர்க் கட்சித் தலைவர் வருகை தந்திருந்தார்.

இரண்டாவது தடவையாகவும் நடைபெறும் இக் கண்காட்சியில் அதிகளவான வெளிநாட்டு வர்த்தகர்கள் சமூகமளித்திருந்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் இக்கண்காட்சியில் எதிர்க் கட்சித் தலைவருடன் பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன், ஜகத் விதான, பேருவளை ஐக்கிய மக்கள் சக்தி பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜமீல், ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான டாக்டர். ரூமி ஹாஷிம், இமாம் ஹனபி, மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எச். எம் அம்ஜாத், பேருவளை நகரசபை முன்னாள் உப தலைவர் ஹஸன் பாஸி உட்பட பலரும் சமூகமளித்திருந்தனர்.

சங்கத் தலைவர் மர்ஜான் பளீல், ஜெம் சிறீலங்கா தலைவர் ஹில்மி காஸிம், செயலாளர் அஷ்கர் முபாரக், பொருளாளர் மிஷ்கர் முனவ்வர், உப தலைவர் ரிஸ்வான் நயீம் உட்பட அதன் உறுப்பினர்கள் அனைவரும் எதிர்க்கட்சித் தலைவரை வரவேற்றதோடு, கண்காட்சி கூடங்களுக்கும் அழைத்துச் சென்றனர்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இக் கண்காட்சியானது கடந்த 10ஆம் திகதியுடன் நிறைவு பெற்றது.

இங்கு உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர்,



மாணிக்கக் கல் மற்றும் ஆபரணத் தொழில் என்பது நம் நாட்டில் விரிவாக்கல் செய்யக் கூடியதொரு தொழில் துறையாகும். ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், வரிச் சலுகைகளை வழங்கி, ஏயுவு மற்றும் சமூகப் பாதுகாப்பு வரிகளை நீக்கி, மாணிக்கக் கல் மற்றும் ஆபரண பொதிக்கு 200 டொலர் என்ற வகையில் Package வழங்குவதன் மூலம் இதை விரிவுபடுத்தலாம்.

மேலும் இந்தத் தொழிலின் நிகர இலாபத்திற்கு வரி விதிக்கப்படக் கூடாது. எமது நாட்டில் இந்தத் துறையை மழுங்கடிப்பதற்குப் பதிலாக இத்தொழிற் துறையை முன்னேற்றுவதற்குச் சாதகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி, திறமையான கைவினைஞர்களை உருவாக்கி, ஏற்றுமதித் தொழிலாக இதனை மேலும் முன்னேற்றுவதற்கு அதிகபட்ச சலுகைகளை வழங்க வேண்டும்.

எனவே, மாணிக்கக் கல் மற்றும் ஆபரணத் தொழிலுக்கு நேர்மறையான முற்போக்கான குறுகிய கால வேலைத்திட்டமொன்றை வகுத்து அதனைச் செயல்படுத்தி, இத்தொழிலை மேலே கொண்டு வர முடியும். ஹொங்கொங் மற்றும் தாய்லாந்தை மிஞ்சும் வகையில் எமது நாட்டின் மாணிக்கக் கல் மற்றும் ஆபரணத் தொழிலை உருவாக்க வேண்டும் என தெரிவித்தார்.

மேலும் இக்கண்காட்சியில் இந்தியாவைச் சேர்ந்த (G.K GEMS) அதிபதியும், உலகின் முன்னணி இரத்தினக்கல் வர்த்தகருமான சன்ரன் ராமசாமி (Chandran Ramasamy) மற்றும் (MAHAKAVEE GEMS) அதிபதியும், முன்னணி இரத்தினக்கல் வர்த்தகருமான சுரேஷ் நடராஜன் (Suresh Natarajan) ஆகியோரும் வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

---

## வாசிப்பீரகை! 20



**பிஸ்தாமி அஹமத்**

# வாசிப்பும் சமூக உணர்வும்

உண்மையான ஒரு வாசகன் தன் வாசிப்புப் பயணம் வழியே தான் வாழும் சமூகத்திற்கு பயனுள்ளவனாக தொடர்ந்தும் இருப்பான்.

குறைந்தபட்சம் எதிர்கால வாசகர்களை உருவாக்குவதை நோக்காகக் கொண்டிருப்பான். இதன் மூலம் கற்றுத் தேர்ந்த ஒரு சமூகம் உருவாகும். நேரத்தை பயனுள்ள வகையில் கழிக்கக்கூடிய ஒரு சமூகம் உருவாகும். கடந்த காலத்தை கருத்தூண்டி வாசிக்க கூடிய ஒரு சமூகம் உருவாகும். எதிர்காலம் குறித்து சிந்திக்க கூடிய ஒரு தலைமுறை உருவாகும். வாசிப்பில்லாத சமூகத்தில் இத்தகைய மாற்றங்களை கண்டுகொள்ள முடியாது.

அறிவுத் தேடலுக்கு வாசிப்பு நுழைவாயிலாக அமைகின்றது. அறிவுத் தேடலின் பிரதான இலக்காக அமைவது தனிமனித உருவாக்கம் தான். தனி மனித மனப்பாங்கு மாற்றம் நடத்தை மாற்றம் அதனடியாக குடும்ப சமூக மாற்றம் போன்றன நிகழ வேண்டும்.

இந்தப் பின்புலத்தில் அறிவுத் தேடலுக்கு வாயிலாக அமையும் வாசிப்புக்கும் இலக்குகள் நோக்கங்கள் காணப்படுகின்றன. வாசிப்பு எப்பொழுதும் ஒரு மனிதனை முழுமைப்படுத்தி விடுகின்றது. முழுமைப்படுத்தப்பட்ட ஒரு மனிதன் சமூகத்திலிருந்து தன்னை துண்டித்துக் கொள்ள முடியாது. தான் சமூகத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வு வாசகன் மனதில் எழ வேண்டும். தான் வாசித்த விடயங்கள் வழியாக சமூக மாற்றத்துக்கும் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்திற்கும் என்னென்ன வகையில் பங்களிக்கலாம் என்ற சிந்தனையும் உத்வேகமும் அவனில் எழ வேண்டும். அப்படி தன் வாசிப்பால் தன் முனைப்புடன் சமூகத்தை நோக்கி அதனை நிலை மாற்றுகின்ற பணியை செய்யாத பட்சத்தில் அந்த வாசிப்பு பெறுமதியற்ற வாசிப்பாக பயனற்ற வாசிப்பாக எந்தவிதமான ஆரோக்கியமான விளைதிறனையும் தராத வாசிப்பாக மாறிவிடும்.

வாசகன் தன் வாசிப்பு பயணத்தை தொடர்கின்ற பொழுது தன் சமூகத்தின் கடந்த கால வரலாற்றையும் சேர்த்து தான் வாசிக்கின்றான். தான் பிரதிநிதித்துவம் செய்கின்ற சமூகத்தின் கடந்த காலத்தை விடவும் எதிர்காலம் மிகச் சிறப்பாக ஒளிமயமானதாக அமைய வேண்டும் என அவன் அவா கொள்ள வேண்டும். சமூகநிர்மான பணிக்கு தன்னுடைய வாசிப்பும் அறிவும் பங்களிக்க வேண்டும். சமூகம் மீதான கரிசனை கவனம் அவனுள் எழ வேண்டும். சமூகத்தை தன் தோளில் சுமந்து கொண்டு சமூக உணர்வோடு தான் அவன் வாழ வேண்டும். தன்னுடைய வாசிப்பானது தன் சுயநலத்திற்காக மாத்திரமல்ல. இந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காகவும் தான் என்பதனை வாசகன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய நோக்கில் அடிப்படை வணக்கங்களாக இருக்கட்டும், அன்றாட செயல்பாடுகளாக இருக்கட்டும், தனக்கு பயன் தருவது போல பிறருக்கும் பயன்தரத்தக்க விதத்தில் அமைய வேண்டும் என்பதினால் தான் தூ ய எண்ணம் அதன் அடிப்படை நிபந்தனையாக அமைகின்றது. சமூகத்திற்கு அதனுடைய விடிவிற்கு எழுச்சிக்கு பங்களிக்க கூடியதாக வாசிப்பும் அமையும். வாசித்த விடயங்கள் மூலம் சமூகத்தின் அறிவுக் கண்களை திறக்க முடியும். சமூகத்தின் மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் அதனால் எண்ணற்ற பயன்கள் கிடைக்கும்.

சமூகம் முன்னேறுவதை நோக்காகக் கொண்ட ஒரு வாசகன் தன் வாசிப்பால் தன் சமூகத்தை நேசிக்க கற்றுக் கொள்கின்றான். இத்தகைய பல வாசகர்கள் தோன்றும் பொழுது சமூகம் மீதான அலாதியான ஈடுபாடும் பற்றும் சமூக உணர்வும் தன்பாட்டில் ஏற்பட்டு விடும்.

இவற்றுக்கு மாற்றமாக சுயநல மேம்பாட்டை நோக்காகக் கொண்ட வாசிப்பு ஒரு பொழுதும் சமூக உணர்வை கொண்டு வராது. அதே சமூக உணர்வற்ற ஒரு தன்மையை உருவாக்கிவிடும் சமூகம் எக்கேடு கெட்டு போனாலும் தன் அறிவாற்றலால் சமூகத்தை விற்று பிழைக்கவும் பின்னிற்கத் தயங்கும் ஒரு மனோநிலை உருவாகுவதை தவிர்க்க முடியாது போகும்.




நாச்சியாதீவு பர்வீன்

# மனோ சின்னத்துரையின் "கிரவுஞ்சி கதைகள்"




**– உக்குவளை அக்ரம்–**

வாழ்வின் புறவயச் சூழல், இடம் பெயர்வு, கடல் கடந்த தேசத்து அகதி வாழ்வு, வெளிநாட்டுத் தொழில்துறை, அந்த மக்களின், அம்மண்ணின் பழக்கவழக்கங்கள், கலைகலாச்சாரப் பண்புகள் ஒரு ஆக்கவியலாளனுக்கு, தனக்கான கருத் தெரிவுக்கும், கதாபாத்திர அமைப்புக்கும் செறிவூட்டுகின்றன. வாசகனுக்குப் புத்தாக்க வாசிப்பனுபவத்திற்கும் பரந்த தேடலுக்கும் இவ்வகை எழுத்துகள் களம் சமைக்கின்றன.

சிறுகதைக்குச் சட்டகமொன்றை வடிவமைத்து அதற்குள்ளே பொருந்துவனவற்றைச்

சிறுகதைகளாக வண்ணம் தீட்டி, முலாம் பூசும் பார்வை தொன்றுதொட்டு நிலவக்கூடியது. நவீன கதை வடிவம் இவற்றைத் தமக்குள் பொருந்திக்கொள்ளாது ஆற்று நீரோட்டம் போன்று, தான் சமைத்த பாதையில் தனக்கான கீதங்களைச் சுதந்திரமாகப் பாடிச் செல்கின்றது. இச்சுதந்திரக் காற்றை, சிறுகதைகளா? என்ற தொனிக்குள் நாம் மடக்கி ஆய்ந்துணர மண்டையைப் பிய்க்கிறோம்.

வுாந ைஅயபந வாயவ கஉைவழை ெசழனரஉநள ைளிரசபநன ழுக வாந னளைவசயஉவழைளெ, உழகெரளழைளெ, யனெ யஉஉனைநவெள ழுக ழுசனைெயசல டகைந. என்பது போல தனது சுற்றுவட்டாரத்திலிருந்து தனக்குத் தெரிந்த நிகழ்வுகளை, பார்த்த சம்பவங் களிலிருந்தே கதைக்கான களத்தைக் கண்டெடுத்துள்ளார் மனோ சின்னதுரை. சிறுகதை என்பது ஒரு முரண்பாட்டைச் சித்தரிக்கும் உரைநடை. இங்கு பல முரண்பாடுகளைக் கதைகளில் ஆழமாக ஆய்ந்துணர்ந்து வாசக மனதில் வேரூன்றச் செய்கிறார்.

"நவீன சிறுகதைகளில் வடிவ ஒழுங்கைத் தேட வேண்டிய தில்லை" என்ற மனச்சாய்வுக் கமைவாக கிரவுஞ்சி கதையும் சிறுகதைக்கு வகுக்கப்பட்ட சட்டகங்களை மீறித் தனது செல்வாக்கை வாசகனில் நிலைகொள்ளச் செய்கிறது.

இலக்கு எதனையும் வைத்துக் கொள்ளாமல் சமூகத்தின் இருப்பையும் அதன் விசித்திரங்களையும் அதற்கான சமூகக் காரணங்களையும் தனிநபர் செயல்பாடுகளையும் மனோ சின்னதுரையின் எழுத்து அழுத்தி எழுதிச் செல்கிறது. நீர்ச்சுழிப்பற்ற நதியின் போக்குப் போன்றது. அதன் ஆழத்தில் என்ன இருக்கிறது என்பதை மேற்பரப்பில் பார்க்க முடியாததைப் போல புனைவின் விவரிப்பில் வாசிக்கும் மனதிற்குள் அலைகள் பலவற்றை எழுப்பிக்கொண்டே இருக்கும் கதைகள் இத்தொகுதி எங்கும் விரவிக் கிடக்கின்றன.

பரந்து விரிந்து எல்லையற்றுக்கிடக்கும் பிரபஞ்ச வெளியில் நம் குருட்டுப் பார்வைக்குத் தெரிவது சிறிது. அதையும் உலகப்போக்கு, நடைமுறைச் சூழலுக்கேற்ப ஒத்திசைவாக எழுதி அழகு பார்க்கும் குறுகிய சிந்தைக்குள் நாம் கவனிக்க மறந்ததையும், பேச விரும்பாததையும், எழுத ஒப்புக்கொள்ளாத மானிட நடத்தை, செயல், நடவடிக்கை, செய்கைகளை எழுத்தாளன் பாசாங்கற்று எழுதியுள்ளதைக் கவனிக்கிறோம். கவனிப்பது என்பது உடல் நிலையையும், மனநிலையையும் பொறுத்தது. காண்கிற எல்லாவற்றையும் கவனிக்க அதிகமானோர் கற்றுக்கொள்வதில்லை. கவனித்த அத்தனையையும் எழுத வேண்டுமென்பதில்லை. எழுதத் தேர்ந்தெடுக்கப்படும் விஷயத்தில் சில பொது அம்சங்கள் – முக்கியமாக மானுடம் வேண்டும். அந்த மானுடத்தின் மேன்மை மனோ சின்னத்துரையின் கதைகளில் விரவிக்கிடக்கிறது.

இதுவரை வாசித்து வந்த கதைத்தொகுதிகளிலிருந்து மாறுபட்ட எதிர்மறையான கதைமாந்தர்கள் குணவியல்புகள், நடத்தைகள் கொண்ட கதையின் கட்டுமானம் மிகக் கவனமாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டம், அதிரடியான திருப்புமுனைகளற்ற கதை, கதை மாந்தர்களை அதன் போக்கில் விட்டு, கதை சொல்லி சமூகத்திற்கும் வாசகனுக்கும் சொல்ல முற்படுவதை அழுத்தமாகச் சொல்லும் ஒவ்வொரு கதையும் கருவும் அபாரம். ஒவ்வொன்றும் வெவ்வேறானவை. அது முன்னிறுத்தும் கருத்துகள் காத்திரமானவை. இலகுவில் கடந்து செல்ல முடியாதவை.

கன்னக்கோல், அந்திப்பூ, இருமல், அச்சுதனின் அம்மா, அணை, சாய்மனக்கதிரை, அப்பா வளர்த்த பிள்ளை, தானம், பிரிவு, திவ்யதரிசனம், துணை, ஆதலினால், நோ, அம்மாவின் காதலன் ஒவ்வொன்றினது கதைக்களம் வெவ்வேறானவை. வெளியின் சாளரம். அவை உணர்த்தி நிற்கும் சமூகப் பெறுமானம் கவனத்திற் கொள்ளப்படவேண்டியவை. உரத்துப் பேசபடவேண்டிய சங்கதிகள்.

மாசிலாமணியும் நாற்பது திருடர்களும், உயிர்வதை, கிரவுஞ்சி இவை மூன்றும் எலிக்கும் மனிதர்களுக்குமிடையிலான கதை. "நோ" ஒரு மேடை நாடகப் பாத்திரவார்ப்பும், காட்சி மாற்றமும், இரு நாய் வழியான உரையாடல் அமைப்பும் கதையின் உச்சமாகிறது.

கொரோனா காலத்தில் கதையெழுதத் துவங்கி இக்குறுகிய காலத்தில் மூன்று தொகுதிகளை வெளியிட்டிருப்பது இவரின் அசுர வளர்ச்சியைக் காட்டுகிறது.

கோகிலா மகேந்திரனின் "வெள்ளோட்ட அனுபவத்தில்" ஜெயகாந்தன் எனக்குக் குருவானவர்

என்பவருக்குச் சிறுகதை வடிவம் தெரியாமல் இருக்காது. சில கதைகளில் அவ்வடிவம் சிறப்பாக வந்தமர்ந்தும் இருக்கிறது.

அதன் வடிவம் பல கதைகளில் தெரிந்து மீறப்படுகிறது போலும். பெரும்பாலான கதைகளில் யதார்த்தவாதமும் இயற்பண்புவாதமே கோலோச்சினாலும் சில இடங்களில் மீறல் வருகிறது. நாடக எழுத்துரு வடிவில் (கிட்டத்தட்ட) ஒன்று. உளவியல் கட்டுரை ஒன்றின் சுருக்கமா என்பது போல் இன்னொன்று, பல பாத்திரங்கள் சடப்பொருள்களின் கோணங்களில் இருந்து பார்க்கப்படுவதாக மற்றொன்று. இப்படி பல

பரிசோதனைகள் இந்நூலில் என்று கருத்துரைக்கிறார்.

இக் கருத்துரைகளுக்கு மனோ சின்னத்துரை "முகம்"பகுதியில்" "எனது கதைகள் சிறுகதை இலக்கணத்துக்குள் அடங்கவில்லை என்கின்றனர் சிலர். அதைப்பற்றி நான் அதிகம் அக்கறை கொள்ளவில்லை. என்னுடைய உணர்வுகளை அடுத்தவரிடம் தொற்ற வைப்பதில் வெற்றி அடைந்திருக்கிறேனா? உண்மைச் சம்பவங்களிலிருந்தே கதைகளுக்கான கருக்கள் என்னை வந்தடைகின்றன. உண்மை போல் இருப்பதே சிறந்த கதை என நம்புகிறேன்.

கதைகளில் தீர்ப்புச் சொல்வதில் எனக்கு உடன்பாடில்லை. அது கடினமான காரியமுமல்ல. வாசகர்களை மேலும் சிந்திக்க தூண்டுவதே என் இலக்கு." என முத்தாய்ப்பு வைக்கிறார்.

கிரவுஞ்சி தலைப்புக்கேற்ப வித்தியாசமான கதைகளின் தொகுப்பு. தவிர்க்க முடியாத வாசிப்பின் நுண்ணிய மானுடத்தை நமக்குள் போதிப்பன. நாம் பார்க்க, நேசிக்க மறந்த பக்கங்களின் கதைகளாகக் கிரவுஞ்சி மனதை ஆக்கிரமித்து நிற்கிறது.

**[நன்றி -"வளர்" இதழ்-9]**

# எங்கள் தலையாய சொத்து

*உம்மும்மா மறைந்து*
*மாதம் கடந்தாலும்*
*மறவாது எம் மனது -*
*அனுதினமும்*
*முள்ளால் குத்துவது போல்*
*மனசு வலிக்கிறது*

*அடிக்கடி*
*நோய்வாய்ப்பட்டாலும்*
*அப்படியே பழைய நிலைக்கு*
*திரும்பிடும் அவர் போக்கு*
*இம்முறையும் கைகூடுமென*
*அனுமானித்ததால் என்னவோ*
*இழப்பை தாங்க முடிவதில்லை*
*எமக்கு*

*வருத்தங்கள் பல இருந்தும்*
*வெளிக்காட்டாமல்*
*கடந்துபோகும்*
*வட்டிலப்பத்தை விரும்பி*
*உண்ணும்*
*(வாப்பும்மா) உம்மும்மா*
*நீங்கள் தான்*
*எங்கள் தலையாய சொத்து*

*கட்டிலிலே கடைசியில் இருந்து*
*கதைக்கும் போது*
*அரவணைப்பிருந்து*
*அடிக்கடி நலம் விசாரிக்கும்*
*உம்மும்மா*
*கல்யாணங்களுக்கு கூட*
*இனியில்லை என்பது நம்*
*வாழ்வின் பூச்சிய நிலை*

*தொலைபேசி பதில்களுக்கு*
*துல்லியமாய் பதில் கொடுத்து*
*தொலைதூர உறவுகளையும்*
*தொலைக்காமல் உடனிருந்து*
*தாரகையாய் மிளிர்ந்திருந்தார்*
*தன் கடமை முடிந்து*
*சென்றுவிட்டார்.*

*ஏதோதோ அதிசயங்கள்*
*உலகில் இருந்தும்*
*வேலையில்லை*
*அனுதினமும் கதைத்து மகிழ*
*உம்மும்மா இனி எமக்கில்லை*
*அல்லாஹ்விடன்*
*இறைஞ்சுகிறேன்*
*அன்னாரை சுவனத்தில்*
*அமர்த்திவிடு ரஹ்மானே*
*ஆமீன்!*

**– பின்த் அமீன் –**

# இஸ்லாமிய இலக்கியக் கழகம் நடாத்தும் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு

தமிழ்நாடு இஸ்லாமிய இலக்கியக் கழகம் நடாத்தும் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு எதிர்வரும் மே மாதம் 9,10,11ந் திகதிகளில் திருச்சியில் நடைபெறவுள்ளது. இதற்கான எல்லா முன்னேற்பாடுகளும் இஸ்லாமிய இலக்கியக் கழகத்தினால் முன்னெடுக்கப்படுவதாக கழகத் தலைவர் முனைவர், பேராசிரியர் சே.மு.மு. முகம்மதலி, பொதுச் செயலாளர் முனைவர், பேராசிரியர் மு. இ. அகமது மரைக்கார் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இலங்கையிலிருந்தும் இலக்கியவாதிகளின் வருகையை இஸ்லாமிய இலக்கியக் கழகம் பெருமளவில் எதிர்பார்க்கின்றது. இதன் காரணமாக மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைப் பேராளர்களுக்கு பதிவுக் கட்டணம் அறவிடுவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக் கட்டுரைகள், மாநாட்டு மலருக்கான ஆக்கங்கள் என்பவற்றினை மாநாட்டுக் குழு எதிர்பார்க்கின்றது. ஆக்கங்களை நேரடியாக ஜனவரி 31ந் திகதிக்கு முன் மாநாட்டுக் குழுவினருக்கு மின்னஞ்சல் மூலம் நேரடியாக அனுப்புதல் வேண்டும். உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய தமிழிலக்கியவாதிகளின் விபரக் கொத்தாக "யார் எவர்?" எனும் நூல் வெளியிடவும் மாநாட்டுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இதற்கான விபரங்களின் உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்து இந்திய ரூபா 300 செலுத்தியதற்கான ஆதாரத்துடன் விழாக்குழுவினர் எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்.

இஸ்லாமிய இலக்கியக் கழக இணைப்பாளராக டாக்டர் தாஸிம் அஹமத் இயங்குகின்றார். உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு சம்பந்தமான மேலதிக தகவல்களையும் விண்ணப்பப் படிவங்களையும் இணைப்பாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.


# 12 போலி அழைப்புக்கள் சந்தேக நபரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு!

(எம்.ரீ.ஆரிப்)

பொலிஸ் தலைமையக 119 அவசர இலக்கத்திற்கு 12 போலி அழைப்புக்களை மேற்கொண்டு பொலிசாரை தவறாக வழிநடத்த முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை கைது செய்யுமாறு அனுராதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்றம் திறப்பனை பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி பொலிஸ் தலைமையக 119 அவசர அழைப்பு தொடர்பாடல் நிலையத்திற்கு சந்தேக நபர் 12 தொலைபேசி அழைப்புக்களை செய்துள்ளதாக பொலிசார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். குறித்த பிரதேசத்தில் அல்லது திறப்பனை பொலிஸ் பகுதியில் எவ்வித குற்றச் செயல்களும் இடம்பெறவில்லை எனவும் அவ்வாறான குற்றச்செயல் இடம்பெறுவதற்கான எந்தத் தயார் நிலையும் இருக்கவில்லை எனவும் பொலிசார் நீதி மன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமை, நட்புறவுக்கான விளையாட்டுப் போட்டி




(எம்.எப்.றிபாஸ்)

ஒற்றுமை மற்றும் நட்புறவை ஏற்படுத்தும் நோக்கில் களனி பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ‍ினால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடப்பார அணி வெற்றி பெற்று சம்பினாக தெரிவு செய்யப்பட்டது.

பல்கலைக்கழக சைபர் மைதானத்தில் மஜ்லிஸின் தலைவர் சராபத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆறு குழுக்களுக் கிடையில் இச்சுற்று போட்டி இடம் பெற்றுள்ள துடன் இறுதிப் போட்டிக்கு சிண்டிகேட் அணியும் கடப்பார அணியும் மோதிக்கொண்டதில் கடப்பார அணி வெற்றி பெற்றுள்ளதுடன் சிறந்த துடுப்பாட்ட வீரராக சஹிரியும், சிறந்த பந்துவீச்சாளராக முஹம்மட் பஹிஜியும் தெரிசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 65



# நிதானம்

– நீங்கள் நிதானமாக செயற்படும் ஒருவரா?
– உங்கள் சிந்தனையில் நிதானம் இருக்கிறதா?
– உங்கள் நடத்தையில் நிதானம் இருக்கிறதா?

நிதானம் என்பது வாழ்க்கையில் முக்கியமான, எல்லோரும் பின்பற்ற வேண்டிய ஒரு நல்லொழுக்கமாகும்.

நிதானம் எங்கள் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நடத்தைகளை ஒழுங்குபடுத்தவும் அவற்றை அழகாக வெளிப்படுத்தவும் உதவுகின்ற அற்புதமான மனிதக் குணமாகும்.

எங்களுக்கு எவை அவசியம் இல்லையே அவற்றை சொல்லாமல், செய்யாமல் தடுக்க உதவுவது இந்த நிதானம் என்கிற உயரிய பண்பாகும்.

எதையும் அதிகப்படியாக செய்வதை தவிர்த்து அதற்குப் பதிலாக சமநிலையை கடைப்பிடிக்க உதவுவது நிதானமாகும்.

முரண்பாடான சூழ்நிலைகளை சரியாக சமாளிக்க உதவுவது நிதானமாகும்.

சந்தேகமான, உறுதியற்ற தகவல்கள் கிடைக்கும் நேரத்தில் அவசரப்படாமல் அவற்றின் உண்மைத் தன்மையை புரிந்து அவதானத்தோடு செயற்பட துணை புரிவது நிதானமாகும்.

அளவுக்கு அதிகமாக எதையும் செய்து அவதிப்படாமல் இருக்கவும், சரியானதை சரியான அளவில், சரியான முறையில் செய்யவும் நிதானம் வழிவகுக்கிறது.

இன்று பலராலும் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக நிதானம் இருப்பதை காணலாம்.

இதன் விளைவாக அதிகமான இடங்களில், அதிகமான சந்தர்ப்பங்களில் அவசரமும் ஆவேசமும் அரசாட்சி செய்வதையும் காண்கிறோம்.

எந்த இடத்தில் நிதானம் இல்லையோ அந்த இடத்தில் அமைதி இருக்க வாய்ப்பில்லை.

முரண்பாடுகளும் முட்டுக்கட்டைகளும் தான் அங்கு அதிகாரம் நடத்தும்.

எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் நிதானத்தை கடைபிடிக்க எங்களை பழக்குவோம். எந்தப் பிரச்னையானாலும் அவை எந்த வடிவத்தில் எங்களை உரசிப் பார்த்தலும் நாம் நிதானமாக நடந்து கொள்வோம்.

எதற்கும் எடுத்து எடுப்பில் முடிவெடுக்காமல் அமைதியாக சிந்தித்து நிதானமாக நடந்து கொள்வோம்.

தேவையில்லாத பிரச்சினைகளை தடுக்கும் அபார சக்தியை நிதானம் கொண்டுள்ளது.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவசியமான இந்த நல்ல குணம் எங்களிடம் இருந்து பரவிச் செல்லட்டும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்




# ஒவ்வொரு தனி நபரும் வித்தியாசமானவரே!

பயாஸா பாஸில்

அவரவர் இயல்புகளும் விருப்பு வெறுப்புகளும் அவற்றினடியான தேர்வுகளும் வித்தியாசமானவையாக, பன்முகமானவையாக அமையலாம். அவரவர்க்குத் தம் வாழ்வில் மகிழ்வும் நிறைவும் கௌரவமும் தருவது எது என்பதை அவரவரே தீர்மானிக்க வேண்டுமே தவிர, வெளிநபர்கள் அல்லர். ஒன்றில், அவற்றுக்கு மதிப்பளிக்கத் தெரிய வேண்டும். இல்லாத பட்சத்தில், தொந்தரவு செய்யாமல் ஒதுங்கிப் போய்விடும் இங்கிதம் பயில வேண்டும்.

அதைவிடுத்து, தாம் இட்ட / வரையறுத்த சட்டகத்துக்குள் பொருந்தவில்லை என்ற ஒரே காரணத்தால், வன்மம் கொள்வதும், முதுகில் குத்த விழைவதும், அவதூறு செய்து திரிவதும் கீழ்மையான மனநோய்மையாகும். பெண்கள் விஷயத்தில் அதுதான் அனேகமாக வெகு இலகுவில் நடந்தேறிக்கொண்டும் இருக்கிறது. ஒருசில பெண்களும்கூட பெண்களுக்கு எதிராக இத்தகைய கைங்கரியத்தைக் காழ்ப்புணர்வினால் செய்துவருவதும் கண்கூடு. (ஆண்களுக்கும் இது நேரலாம்தான்)

அவ்விதம் பிறரைப்புண்படுத்தும் நோக்குடன், பிறரின் மானத்தோடு விளையாடுவோருக்கு எந்தவித அறமோ, மன உறுத்தலோ அறவே இருப்பதில்லை. ஆழமான வன்மம் அவர்களின் அகத்தை இருளடையச் செய்து விடுவதே அதற்கான காரணம் ஆகும்.

எனவே, அத்தகையோர் மீது ஆத்திரம் தோன்றுவது இயல்புதான். எனினும், அதனால் எப்பயனும் விளையப் போவது இல்லை. மாறாக, ஒரு நல்ல மனநல மருத்துவரைப் பரிந்துரைத்துவிட்டு, அத்தகையோரின் மனநலம் சீர்மை பெறுவதற்காக மனமார்ந்து பிரார்த்தனை புரியலாம். அதுவே, பண்பட்ட மனத்தினர் செய்யக் கூடியது.

# கடைசிவரை சரியான துணையாக இருப்பதே... திருமணம்

திருமணம் என்பது சரியான துணையைத் தேடிப்பிடிப்பது அல்ல... கடைசிவரை சரியான துணையாக இருப்பதே...

சிறந்த துணை ...!!! என்பது உடனிருப்பதோ... உணவளிப்பதோ... உடையளிப்பதோ... கிடையாது...!!! எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பது...!!

அன்பின் எதிர்பார்ப்புகள் பணமோ பொருளோ இல்லை.. பாசத்துடன் ஒரு பார்வை, அக்கறையுடன் ஒரு வார்த்தை!.

புரிந்து கொண்டால் கோபம்கூட அர்த்தம் உள்ளதாய் தெரியும், புரியவில்லை என்றால் அன்பு கூட அர்த்தம் அற்றதாய் தெரியும்..!!

புரிந்து நடக்க ஒரு துணையிருந்தால் சரிந்து விழாமல் வாழ்ந்திடலாம். வாழ்க்கை முழுவதும்!!

ஒருவருக்கொருவர் அன்பை அள்ளிக் கொடுப்பதில் எல்லாம் கணவன் மனைவி உறவல்ல..

தவறென தெரிந்தாலும் மனதோடு மன்னித்து விட்டுக் கொடுப்பதில் தான் ஆயுள் மொத்தமும் அடங்கும்!

உன்னை நம்பி வந்த பெண்ணை எந்த இடத்திலயும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டு கொடுக்காதே

அவள் உன் உறவல்ல உன் உயிரில் பாதி.....

தள்ளாடும் வயதிலும் தாங்கிப்பிடிக்க உறவு இருந்தால் வயதானாலும் என்றும் நீ வாலிபனே..!

இந்த மாதிரி நல்ல வாழ்க்கைத் துணை இருந்தாலே போதும்..! என்றும் உன் வாழ்க்கை சிறக்க..



# கவிதைக்களம் காவிபாவை குழுமத்தின் சர்வதேச புத்தகக் கண்காட்சி

(ஐ. ஏ. காதிர் கான்)

சென்னை – கன்னிமாரா நூலகப் புத்தகக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த "காலங்கள் பேசும் காவியங்கள்" என்னும் 11000 கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூல் உள்ளிட்ட புத்தகக் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை (12) பெற்றது.

"கவிதைக்களம் காவிபாவை குழுமம்" சார்பாக வைக்கப்பட்டிருந்த இந்த 11000 கவிதைத் தொகுப்பு நூல் சர்வதேச புத்தகக் கண்காட்சியில், மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், "வசந்தா பதிப்பகம்" பதிப்பாளர் முனைவர் மோ. பாட்டழகன்."

"இளவரசி" மாத இதழ் ஆசிரியர் எழுத்தாளர் சங்கமித்திரை, சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பி.எஸ். அகிலன், கவிஞர் ஆனந்தி துறைவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

"கவிதைக்களம் – கவிபாவை குழுமம்" சார்பாக, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட இந்நூலின் தொகுப்பு ஆசிரியர் "கலைமாமணி" கவிபாவை கார்த்திக் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜே.எம்.ஜே. மீடியாவின் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

(அரபாத் பஹுர்தீன்)

ஜே.எம்.ஜே. மீடியா நிறுவனமானது சமூகத்தின் வளர்ச்சிக்காக பல திட்டங்கள் முன்னெடுத்து, அதனை செயற்படுத்தி வருகின்ற நிலமையில் மரநடுகை திட்டத்தில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஹம்மது பைசலின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

ஜே.எம்.ஜே. மீடியாவின் நிறுவன பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் தலைமையின் கீழ் உலக நாடுகளில் உள்ள ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் சிறப்பாக நடாத்தி முடிக்கப்பட்ட திட்டங்களான வாசிப்பு தின நிகழ்ச்சி மற்றும் இயற்கையை காப்போம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.



# இந்திய, பாகிஸ்தான் தவிர ஏனைய 6 அணிகளும் தமது வீரர்கள் குழாத்தினை அறிவித்தது



அரபாத் பஹுர்தீன்

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஐசிசி சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்காக பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகளைத் தவிர்ந்த மற்றைய 6 அணிகளின் 15 வீரர்கள் கொண்ட விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஏற்பாட்டில் பாகிஸ்தானில் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான அணிகளில் 15 வீரர்கள் கொண்ட விபரத்தினை அறிவிக்குமாறு ஐசிசி கூறியிருக்க, அதற்கமைய ஒவ்வொரு கிரிக்கெட் சபைகளும் தத்தமது 15 வீரர்கள் கொண்ட குழாத்தினை வெளியிட்டு வருகின்றது.

அந்தவகையில் போட்டிகளை நடாத்தும் பாகிஸ்தான் அணியும் அவர்களின் வைரிகளான இந்தியாவும் இதுவரையில் தமது அணி விபரத்தினை அறிவிக்கவில்லை. மாறாக மற்றைய 6 அணிகளும் தத்தமது வீரர்கள் விபரத்தினை வெளியிட்டுள்ளது.

### சஷீப் அல் ஹசன் அற்ற பங்களாதேஷ் அணி

இடது கைத் துடுப்பாட வீரரான நஜ்முல் ஹசன் சாண்டோ தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள அணியில் அனுபவமிக்க சகலதுறை வீரரான ஷ கீப் அல் ஹசன் இடம்பெறவில்லை. மேலும் அனுபவமிக்க வீரர்களான முஷ்பிகுர் ரஹீம் மற்றும் முஹம்மதுல்லாஹ் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் துடுப்பாட வீரர்களாக தௌஹீத் ஹிரிடோய், சவுமியா சர்ஹார் போன்ற துடுப்பாட வீரர்களுடன், சகலதுறை இளம் வீரரான மெஹ்தி ஹசன் மிராஸ் ரிஸாட் ஹுசைன் போன்றவர்கள் இடம்பெற்றுள்ளனர். அத்துடன் பந்துவீச்சாளர்களாக முஸ்தபிசுர் ரஹ்மான், டஸ்கின் அஹமட் ஆகியோரும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மிச்சல் சாண்ட்னர் தலைமையில் நியூசிலாந்து

இடம்பெறவுள்ள மிக முக்கிய தொடருக்கான நியூஸிலாந்து அணியை சுழல்பந்து வீச்சாளரான மிச்சல் சாண்ட்னர் வளிநடாத்துகின்றார். அவருடன் அனுபவமிக்க துடுப்பாட வீரரான கேன் வில்லியம்ஸன் வில் யங் போன்றோருடன், சகலதுறை வீர்ர்களான பிரஸ்வெல், ரிச்சின் ரவீந்திர, டெர்லி மிச்சேல், பிலிப்ஸ் மற்றும் ஸ்மித் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ள அணியில் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் பந்துவீச்சு வரிசையில் வேகப்பந்து வீச்சாளர்களாக போர்கியூஸன், மேட் ஹென்றி, பென் சீர்ஸ் ஆகியோருடன் வில்ஓர்க்கி ஆகியோருடன் விக்கெட்காப்பு துடுப்பாட வீரர்களாக லெத்தம் மற்றும் டெவென் கோன்வே ஆகியோர் இடம்பெற்றிருக்க இத் தொடரில் கிண்ணம் வெல்லும் அணிகளில் நியூசிலாந்து இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### சுழலில் மிரட்டப்போகும் ஆப்கானிஸ்தான்

துடுப்பாட வீரரான ஹஸ்மதுல்லாஹ் ஷஹீடி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தான் அணியைப் பொறுத்தமட்டில் அவ் அணி சுழல்பந்து வீச்சிற்கே அதிக முக்கியதுவம் வழங்கியுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியின் துடுப்பாட வீரர்களாக ரஹ்மத் ஷா, இப்ராஹிம் சத்ரான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மேலும் விக்கெட் காப்பு துடுப்பாட வீரர்களாக ரஹ்மதுல்லாஹ் குர்பாஸ் மற்றும் இக்ராம் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மேலும் பந்துவீச்சில் குறிப்பாக சுழல்பந்து வீச்சில் உலகத்தரம் வாய்ந்த ரஷீத்கான் மற்றும் முஹம்மது நபி ஆகியோருடன் இளம் சுழல்பந்து வீச்சாளர்களான ஹசன்பர் மற்றும் நூர் அஹமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் வேகப்பந்து வீச்சில் பறூக்கி, நவீட் சத்ரான் மற்றும் குல்படின் நைப் மற்றும் அஸ்மத்துல்லாஹ் ஓமர்ஷாய் அங்கம்வகிக்கின்றனர். அத்துடன் சுழல்பந்து வீச்சாளர்களான அடம் சம்பா இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கிண்ணம் வெல்லும் எதிர்பார்ப்புடன் அவுஸ்திரேலியா

சகலதுறை வீரரான பெட்கமினீஸின் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அணியில் துடுப்பாட வீரர்களாக ஸ்டீபன் ஸ்மித், மார்க்கேஸ் லபுச்சங்கே மற்றும் ட்ரவீஸ் ஹெட் ஆகியோருடன் விக்கெட் காப்பு துடுப்பாட வீரர்களாக அலெக்ஸ் கெரே, ஜோஷ் இங்லிஸ் ஆகியோர் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் சகலதுறை வீரர்களாக கிளேன் மெக்ஸ்வெல், மிச்சேல் மார்ஸ், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். மேலும் வேகப்பந்து வீச்சாளர்களாக மிச்சல் ஸ்டார்க், ஹசில்வூட், நெதன்

### ஜோஸ் பட்லரின் தலைமையில் களம் கானும் இங்கிலாந்து

அதிரடி ஆரம்பத் துடுப்பாட வீரரான ஜோஸ் பட்லர் அணித்தலைமைப் பொறுப்பேற்று நடாத்துகின்றார். அவருடன் துடுப்பாட்ட வரிசையை பலப்படுத்த ஹென்றி புரூக், சோல்ட் மற்றும் ஜோ ரூட் ஆகியோர் உள்ளனர்.

மேலும் விக்கெட் காப்பு துடுப்பாட வீரர்களாக பென் டுகேட் மற்றும் அணித்தலைவர் ஜோஸ் பட்லர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அத்துடன் சகலதுறை வீரர்களாக லிவிங்ஸ்டன் மற்றும் பெத்தல் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் வேகப்பந்து வீச்சாளர்களாக ஜொப்ரா ஆச்சர், அடிகின்ஷன், ஓவர்டொன், மார்க் வூட் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர். மேலும் சுழல்பந்து வீச்சினை பலப்படுத்த ஆதில் ரஷீட் மற்றும் சாகிப் மொஹம்மத் அணியில் பெயரிடப்பட்டுள்ளனர்.

### கிண்ணத்தை வேட்டையாட பவுமாவின் தென்னாப்பிரிக்கா தயார்

மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரான பவுமா தலையில் களம் கண்டுள்ள தென்னாப்பிரிக்க அணியைப் பெறுத்த வரையில் துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்த ஷொர்சி, க்ளாசன், ஸ்டப்ஸ் மற்றும் அதிரடி துடுப்பாட வீரரான டேவிட் மில்லர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மேலும் விக்கெட் காப்பு துடுப்பாட வீரராக வென்டர் டூஸன் பெயரிடப்பட்டுள்ளார்.

மேலும் சகலதுறை வீரர்களாக மார்க்ரம் மற்றும் ஜென்ஸன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடன் பந்துவீச்சாளர்களில் வேகப்பந்து வீச்சாளர்களாக ரபாடா, மல்டர், நிகிடி ரிக்கெல்டொன் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணியின் சுழல்பந்து வீச்சாளர்களான ஸம்சி மற்றும் மஹராஜ் ஆகிய இருவரின் பெயரும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### இதுவரை அறிவிக்கப்படாத எதிரி அணிகள்

இத்தொடருக்கான 8 அணிகளில் 6 அணிகளின் வீரர்கள் விபரம் அறிவிக்கப்பட்டிருக்க கிரிக்கெட்டின் வைரிகளான இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளும் தமது 15 வீரர்கள் கொண்ட குழாத்தினை வெளியிடவில்லை. அதிலும் இத் தொடர் பாகிஸ்தானில் இடம்பெற உள்ள நிலையில் இந்திய அணி பாகிஸ்தான் சென்று போட்டிகளில் பங்கேற்க முடியாது என அறிவித்திருக்க இந்திய அணி பங்கேற்கும் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடாத்தி ஏற்பாடாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஸ்பெய்ன் சூப்பர் கிண்ணம்

## ரியல் மெட்ரிட்டை பந்தாடி மகுடம் சூட்டியது பார்சிலோனா

*ஸ்பெயின் சூப்பர் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் தமது வைரிகளான ரியல் மெட்ரிட் கழகத்தினை 5:2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த*

*வீழ்த்திய பார்சிலோனா அணி சம்பியன் மகுடத்தை தனதாக்கி அசத்தியது.*

*விறுவிப்புக்குப் பஞ்சமின்றி ஆரம்பித்த போட்டியில் முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்த ஐந்தாவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் வீரர் எம்பாப்பே கோல் அடிக்க 1:0 என முன்னிலை பெற்றது ரியல் மெட்ரிட் அணி.*

*எனினும், ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் லேமின் யமலும் , 39ஆவது நிமிடத்தில் ரொபின்ஹா அடுத்தடுத்து கோல்களை உட்செலுத்தி அசத்த பார்சிலோனா 2:1 என முன்னிலைப் பெற்றது.*

*மேலும், 36ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட ரொபர்ட் லெவாண்டோஸ்கி அதனை கோலாக மாற்றியிருக்க முதல் பாதியில் 3:1 என முன்னிலையை மேலும் வலுப்படுத்தியது பார்சிலோனா. தொடர்ந்த முதல்பாதியின் உபாதை நேர ஆட்டத்தில் பார்சிலோனா அணியின் அலேஜாண்ட்ரோ கோல் அடித்தார்.*


*இதனால் முதல்பாதி நேர ஆட்ட முடிவில் பார்சிலோனா 4:1 என முன்னிலைப் பெற்றது.*

*தொடர்ந்த ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆட்டத்தில் 48ஆவது நிமிடத்தில் ரொபின்ஹா மீண்டும் கோல் அடிக்க பார்சிலோனா அணி 5:1 என வெற்றியை உறுதி செய்தது. இருப்பினும் போட்டியில் 56வது நிமிடத்தில் பார்சிலோனா வோஜ்சியெச் ஸ்செஸ்னி ரெட்கார்டு வழங்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் பார்சிலோனா 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டது.*

*இதை பயன்படுத்தி ரியல் மாட்ரிட் வீரர் ரொட்ரிகோ 60ஆவது நிமிடத்தில் கோல் அடிக்க போட்டி 5:2 என மாற்றம் பெற்றது.*

*அதன்பின் ரியல் மாட்ரிட் வீரர்களை கோல் அடிக்கவிடாதபடி பார்சிலோனா வீரர்கள் பார்த்துக் கொண்டனர். இதனால் ஆட்டம் முடியும் வரை ரியல் மாட்ரிட் அணி வீரர்களால் மேலதீக கோல் அடிக்க முடியவில்லை.*

*இதனால் பார்சிலோனா 5:2 என வெற்றி பெற்று ஸ்பெயின் சூப்பர் கிண்ணத்தின் சம்பியன் மகுடத்தினை வெற்றி கொண்டு அசத்தியது.*




இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.